விலை: 30.00

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 01 வியாழக்கிழமை (13.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 56

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

மாணவனின் வீடு மீது தாக்குதல்

## முகநூல் ஊடாக உரிமை கோரியது ஆவா குழு

(யாழ்ப்பாணம்)
பகிடிவதை குற்றச்சாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தால் வளாகங்களுக்குள் உள் நுழைய இடைக்காலத் தடை விதிக்கப்பட்ட 23

டிப்பரில் கடத்த முற்பட்ட

## 100 கிலோ கேரள கஞ்சா

மானிப்பாயில் மீட்பு
சாரதி தப்பியோட்டம் 03

அதிகார பரவலாக்கத்தை சர்வதேச

## சமூகம் மதிக்க வேண்டும்

ஐரோப்பிய தூதுக்குழுவினரிடம்
இரா.சம்பந்தன் வலியுறுத்து

(கொழும்பு)
தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையான ஒன்றிணைந்த பிரிக்கமுடியாத, பிளவுபடாத நாட்டினுள் அதிகாரப் பரவலாக்கம் என்ற நியாயமான கோரிக்கையை சர்வதேச சமூகம் மதிக்க வேண்டும் என்று 23

## உயர்தரத்தில் சித்தியடைந்த அனைவருக்கும்

பல்கலைக்கழக வாய்ப்பு
அமைச்சர் பந்துல

(கொழும்பு)
உயர்தரத்தில் சித்தியடைந்த அனைவருக்கும் பல்கலைக்கழக வாய்ப்பை வழங்கும் சவாலை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது என தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம், உயர்கல்வி, தொழில்நுட்ப புத்தாக்க அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.


அரச - தனியார் ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடன் நேற்றுக் காலை அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர்,

"உயர்தரத்தில் சித்தியடைந்த சகல மாண 23

# தனிச் சிங்கள அரசை உருவாக்க வேண்டும்

ஞானசார தேரர் சர்ச்சைக் கருத்து




(கொழும்பு)
**தனிச் சிங்கள அரசாங்கத்தை உருவாக்கி அடிப்படைவாத சிந்தனைகளற்ற தமிழ் - முஸ்லிம் புதிய அரசியல் தலைவர்களை அதற்குள் உள்வாங்க வேண்டும் என பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**

பொது பல சேனாவின் காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர், தனிச் சிங்கள பௌத்த தலைவரைத் தெரிவு செய்ததைப் போன்று தனிச் சிங்கள அரசாங்கமும் தோற்றம் பெறவேண்டும் எனக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து 23

## மாங்குளம் வைத்தியசாலை வளாகத்தில் மனித எச்சங்கள் கண்டுபிடிப்பு

அகழ்வு மேற்கொள்ளுமாறு
நீதிபதி உத்தரவு



(மாங்குளம்)
மாங்குளம் வைத்தியசாலை வளாகத்தில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் குறித்த பகுதியை பார்வை 24

## சாரதி அனுமதிப்பத்திரம் 3 மணி நேரத்தில் பெறலாம்

போக்குவரத்துத்துறை இராஜாங்க
அமைச்சர் திலும் அமுனுகம

(கொழும்பு)
வாகன சாரதிக்காக விண்ணப்பிக்கும் ஒருவர் தமது விண்ணப்பம், மருத்துவ சான்றிதழை சமர்ப்பித்த பின்னர் மூன்று மணித்தியாலங்களில் 24

## நெடுங்கேணி காட்டுப்பகுதியில் கஞ்சாத் தோட்டம் முற்றுகை



(வவுனியா)
வவுனியா வடக்கு நெடுங்கேணி பகுதிக்குட்பட்ட காட்டுப் பகுதியில் கஞ்சாசெடிகள் பயிரிடப்பட்ட தோட்டம் ஒன்று விசேட அதிரடிப் படையினரால் நேற்று முற்றுகையிடப்பட்டுள்ளது. 24

மக்களின் நலனுக்காகவே

## மகிந்த இந்தியாவிடம் அவகாசம் கோரினார்

இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா

(கொழும்பு)
நாட்டின் கடன் தவணையை செலுத்துவதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந் 23



## தமிழ் இனவாதிகளால் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது

குணதாச அமரசேகர 09

நீதிமன்ற விசாரணையை நிறுத்த

## ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு எவ்வித அதிகாரமுமில்லை

சட்டமா அதிபர் மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)
அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் விசாரணை 24

## விக்னேஸ்வரனின் கூட்டணிக்கும் கூட்டமைப்புக்கும் வித்தியாசம் இல்லை

முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் உருவாகியுள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் கொள்கையில் எந்த வித்தியாசமும் இல்லையென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். 23

# முதலாமாண்டு நினைவலைகள்

## அமரர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்

**(ஓய்வு நிலை உதவிப்பணிப்பாளர்-
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
யாழ்ப்பாணம்)**

*எத்தனை பிறப்பெடுத்தாலும் எங்கள்
மாமாவாக பிறக்க வேண்டும்!*



**அன்னை மடியில்
01.03.1949**

**ஆண்டவன் அடியில்
12.02.2019**

ஈழத்தின் திருப்பரங்குன்றமாம்
குப்பிழான் பதியிலே தோன்றி- எங்கள்
குடும்பத்திற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த
ஒப்பில்லாத உயர்வினரே!
நீங்கள் மறைந்து ஓராண்டுகள் ஆனாலும்
எம் எண்ணங்களில்- என்றும்
எங்களுடன் நீங்கள் வாழ்ந்து
கொண்டிருக்கிறீர்கள் அன்பு மாமா!

திருமந்திரத்தின் சாறைப் பிழிந்தெடுத்த வித்தகரே!
சிவமகாலிங்கம் எனும் பெயருடைய தூயவரே!
அள்ள அள்ளக் குறையாத
உங்கள் தனித்துவ சொற்பொழிவாற்றலும்
சைவத்தமிழுக்காக நீங்கள் செய்த மகத்தான சேவைகளும்
காலம் தாண்டியும் வரலாற்றில் நிலைத்திருக்கும்
இது உறுதி....!

எங்கள் குல தெய்வமாகவும் பேசும் தெய்வமாகவும் நின்று
பேரருள் புரியும் கற்கரைக் கற்பக விநாயகன் என்று
குப்பிழானில் நீங்கள் சொற்பொழிவு ஆற்ற ஆரம்பிக்கும் பாங்கும்
வீடு தேடி வரும் போதெல்லாம்
வாசல் காணும் முன்னரே இந்திரா...இந்திரா....என
உங்கள் அன்புத் தங்கையை உரத்த தொனியில்
அழைக்கும் பாங்கும்
இன்றுவரை எம் காதுகளில்
ஓயாது ஒலித்துக் கொண்டிருப்பதை
நீளாத் துயில் கொண்ட நீங்கள் அறிவீரோ!

.ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறாத உங்கள் அன்புத் தங்கையின் மனதை
தேற்றிட எம்மால் இன்னும் இயலவில்லை!
தேடிக் கொண்டேயிருக்கின்றோம் உங்களுடன் பழகிய ஞாபகங்களை
எங்களுக்கென ஒரு அடையாளத்தை உருவாக்க முதலே
எங்களுக்கான தனி அடையாளத்தை உருவாக்கிய பெருந்தகையே!

உங்களை இப் பிறப்பில் மாமாவாக நாம் பெற்றதே
முற்பிறப்பில் நாம் செய்த மகாதவம்
அடுத்து எத்தனை பிறப்பெடுத்தாலும் நீங்களே
எங்கள் மாமாவாகப் பிறக்க வேண்டும்!

**என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்:-
அன்பு மருமகன்கள் செ.கிரிசாந்
(நிமிர்வு இதழின் பிரதம ஆசிரியர்)
செ.ரவிசாந் ('Tamil Twin' இணையத்தள பிரதம
ஆசிரியரும், சுயாதீன ஊடகவியலாளரும்)
செ. சசிகாந் (ஜனாதிபதி சாரணன்)**

**"இந்திரபவனம்"**

**குப்பிழான் தெற்கு,ஏழாலை
கவியாக்கம்:-செ.ரவிசாந்**


## வேலை ஆட்கள் தேவை

**எமது ஸ்தாபனத்திற்கு பணியாளர்கள் தேவை**

**01.தரவு பதிவாளர்(கணினி, ஆண்)**
**02.பொதி சுமப்பவர்கள்(ஆண்)**

**நேரில் சமுகம் தரவும்.**

**தேனு களஞ்சியம்(நெஸ்லே)
54/2, பலாலி வீதி, கோண்டாவில்.**

T.P:-
**0214921258,
0770456146** (2242)


## வீதியை திருத்தித் தருவதாக அங்கஜன் எம்.பி உறுதி

(யாழ்ப்பாணம்)

வலி. தெற்கு பிரதேசசபைக்குட்பட்ட புத்தூர் வீதியையும் அச்செழு நீர்வேலி வீதியையும் இணைக்கும் 1 கிலோமீற்றர் வரையான ஜங்கரன் சனசமூக நிலைய வீதியை திருத்தித் தருவதாக பாரா ளுமன்ற உறுப்பினரும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் உறுதியளித்துள்ளார்.

அக்கிராம மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நேற்றைய தினம் அவ்வீதியை நேரில் சென்று பார்வையிட்ட போதே வீதியைத்திருத்தித் தருவதாக அவர் உறுதியளித்துள்ளார்.(ம-3)

### கண்ணீர் காணிக்கை

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின்
பொதுச்செயலாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான
திரு.சரா.புவனேஸ்வரன் அவர்களின் சகோதரர்

அமரர்
**சரவணமுத்து குகதாஸ்**



கடந்த 06.02.2020 அன்று
இறைபதம் அடைந்த செய்தி
கேட்டு துயரடைகின்றோம்.
அன்னாரின் குடும்பத்துயரில்
நாமும் பங்கேற்பதோடு ஆழ்ந்த
அனுதாபத்தை
வெளிப்படுத்துகின்றோம்.

**தாய்ச்சங்க நிர்வாகிகள்,
பிராந்திய நிர்வாகிகள்,தோழமைச்சகோதரர்கள்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.**


## ஒப்பந்த சேவை

தரமான கட்டட வேலைகள் உரிய காலத்தில் உங்கள் எண்ணப்படி செய்து வழங்கப்படும்.

**luxmy construction (pvt)Ltd**
neervely south, neervely
thumpalai road, Point pedro
0774366704 (c-9228)

### டிப்பரில் கடத்த முற்பட்ட

# 100 கிலோ கேரளக் கஞ்சா மானிப்பாயில் நேற்று மீட்பு!

## அதிரடிப்படை அதிகாலையில் அதிரடி

## சாரதி தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

100 கிலோ கேரளக் கஞ்சாவுடன், டிப்பர் வாகனம் ஒன்றை விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர். டிப்பர் வாகனச் சாரதி தப்பியோடியுள்ளார்.

மானிப்பாய் உடுவில் வீதியில் நேற்று அதிகாலை, விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது, டிப்பர் வாகனத்திற்குள் பொதிகள் செய்யப்பட்ட நிலையில் கஞ்சா காணப்பட்டது.

இந்நிலையில், கஞ்சா மற்றும் டிப்பர் வாகனத்தை விசேட அதிரடிப் படையினர் மீட்டு மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தப்பியோடிய வாகன சாரதி தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-101)

### "இணைத் தலைவர்கள் இருக்க முடியாது"

# மைத்திரி மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை

## மகிந்த அணி வருத்தம்

(கொழும்பு)

தேர்தல் ஒன்றில் வெற்றி பெறுவதற்கு நம்பிக்கையே பிரதானமானது. எனினும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது மக்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை என்பதை வருத்தத்துடன் என்றாலும் தெளிவாக கூற வேண்டும் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"உருவாக்கப்படும் எந்தக் கூட்டணியாக இருந்தாலும் இணைத் தலைவர்கள் இருக்க முடியாது. மகிந்த ராஜபக்ஷவே கூட்டணியின் தலைவராக இருக்க வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் நாங்கள் உருவாக்கும் கூட்டணியின் தலைவர் பதவியை வேறு எவருக்கும் வழங்கமாட்டோம்.


ஒத்துழைப்புகளை சீர்குலைக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அணியினர் ஏன் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். சின்னம் பிரச்சினையாக இருக்காது. நாடும் மக்களும் ஏற்றுக்கொண்ட தாமரை மொட்டுச் சின்னமே தேர்தல் வெற்றிச் சின்னம்.

மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதே தேர்தல் வெற்றிக்கான பிரதான சாதக நிலைமை. பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்துள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது தற்போது மக்களுக்கு நம்பிக்கையில்லை" எனவும் செஹான் மேலும் தெரிவித்தார். (இ-7)

### பகிடிவதைக் குற்றச்சாட்டு

# இடைக்காலத் தடை விதிக்கப்பட்ட மாணவனின் வீடு மீது தாக்குதல்





(குப்பிழான்)

பகிடிவதைக் குற்றச்சாட்டுக்குள்ளான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகங்களுக்குள் உள்நுழைய இடைக்காலத் தடை விதிக்கப்பட்ட மாணவனின் வீட்டுக்குள் நுழைந்த இனம் தெரியாத நால்வர் வீட்டிலிருந்த பல பெறுமதியான பொருட்களை அடித்து உடைத்துச் சேதப்படுத்தி விட்டு சென்றதாகத் தெரிய வருகிறது.

குறித்த சம்பவம் ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது.

குறித்த மாணவனின் வீட்டுக்குச் சென்ற இனம் தெரியாத நால்வர் மாணவனை அழைத்துள்ளனர்.

மாணவன் வீட்டில் இல்லாத நிலையில் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் கண்ணாடிகள் மற்றும் ஜன்னல் கண்ணாடிகள் உள்ளிட்டவற்றை அடித்து உடைத்து சேதப்படுத்தி விட்டுச் சென்றனர்.

இச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-18)

### யாழ்ப்பாணத்தில் 1061

# ஜனவரி மாதத்தில் மாத்திரம் 10,000 டெங்கு நோயாளிகள்

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் இலங்கையில் 10924 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டனர். இதேவேளை பெப்ரவரி முதல் வாரத்தில் மாத்திரம் 428 பேர் டெங்கு நோயாளிகளாக இனங்காணப்பட்டனர். கொழும்பிலேயே அதிகளவான 1693 நோயாளிகள் இவ்வாறு இனங்காணப்பட்டனர். திருகோணமலையில் 1278, யாழ்ப்பாணத்தில் 1061, மட்டக்களப்பில் 1044. கம்பஹாவில் 74, கண்டியில் 662 என்ற அடிப்படையில் டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டனர். (இ-7)

# இந்து சமுத்திரத்தில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

(கொழும்பு)

இலங்கைக்கு தென்கிழக்கு திசையில் இந்து சமுத்திரத்தில் 5.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நேற்று அதிகாலை 2.34 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. எனினும், இந்த நிலநடுக்கத்தால் இலங்கைக்கு பாதிப்பில்லை என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. இந்த நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை என்பதோடு, இலங்கையைச் சூழவுள்ள கடற்பிராந்தியங்கள் பாதுகாப்பாக உள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்தது. (இ-7)

# புதிய கொரோனா வைரஸ் நோயின் பெயர் 'COVID-19'

(ஜெனிவா)

புதிய கொரோனா வைரஸால் ஏற்படும் நோய்க்கு, உலக சுகாதார ஸ்தாபனம் "COVID-19" எனப் பெயரிடப்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதனோம் (Tedros Adhanom Gheybreyesus), ஒரு பெயரைக் கொண்டிருப்பது ஒன்றிலிருந்து மாறுபட்ட துல்லியமற்ற அல்லது குழப்பத்திலிருந்து தடுக்க முக்கியமானது எனத் தெரிவித்தார்.

அதற்கமைய இப்பெயரின் உச்சரிப்பு C-O-V-I-D இணைப்புக் கோடு ஒன்று ஒன்பது என எழுதப்படும் என உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியது. (இ-7)

# இதயத்தை இழக்க சஜித் கூட்டணி தயார்



(கொழும்பு)

சஜித் பிரேமதாஸ தலைமையிலான புதிய அரசியல் கூட்டணிக்காக முன்மொழியப்பட்ட (இதயம்) சின்னத்தை மறுபரிசீலனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் புதிய கூட்டணிக்கு 'தேசிய சமாதான கூட்டணி' என்று பெயரிடப்பட்டுள்ளதோடு புதிய சின்னம் தொடர்பாக கட்சிக்குள் மீண்டும் முரண்பாடுகள் தோற்றம்பெற்றன.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக நேற்றுப் புதன்கிழமை கருத்து தெரிவித்து முன்மொழியப்பட்ட புதிய கூட்டணியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார, சின்னம் தொடர்பாக தங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனக் கூறினார்.

எனவே ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்களுடன் அமர்ந்து சின்னம் குறித்து ஒருமித்த கருத்தை எட்ட அவர்கள் தயாராக இருப்பதாகவும் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்தில், முன்மொழியப்பட்ட புதிய கூட்டணி 'யானை' சின்னத்திலேயே போட்டியிடும் என்ற முடிவு எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மரண அறிவித்தல்



அன்னை மடியில்

1927 . 12 . 23

ஆண்டவன் அடியில்

2020 . 02 . 10

## திருமதி சின்னம்மா திருநாவுக்கரசு

## (சின்னம்மாக்கா ரீச்சர்)

### (முன்னாள் ஆசிரியர், அதிபர்- யா/கரணவாய் தாமோதர வித்தியாலயம்)

*கரணவாய் மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா திருநாவுக்கரசு (2020.02.10) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்ற கந்தையா - கைராசி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற செம்பர் - பூரணம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் (சிங்கர் கொம்பனி முகாமையாளர் பருத்தித்துறை)அன்பு மனைவியும், அமரர் சிவபாலன் (சிங்கர் கொம்பெனி), சிவநாதன் (திரு வீடியோ விஷன் - லண்டன்), சிவராணி, சிவநேசன் (சுவிஸ்), சிவகுமாரி (சுவிஸ்), சிவகௌரி, சிவரஞ்சினி (ஆசிரியர்- உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), சிவதாசன் (சுவிஸ்), சிவமாலினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சரஸ்வதி, கௌரி (லண்டன்),அமரர் சிவலிங்கம், நளினி (சுவிஸ்), அன்னலிங்கம் (சுவிஸ்),ரவீந்திரன் (நீர்ப்பாசனத்திணைக்களம்),சச்சிதானந்தமூர்த்தி(இலங்கை போக்குவரத்து சபை - கோண்டாவில்), சுசிகலா (சுவிஸ்), உதயகுமார் (கனடா) ஆகியோரின் மாமியாரும் கவிதா, ஜெயந்தன், சுதாகரன், அருந்-தஷா, பிரியந்தினி, பிரியங்கன்,பிரியலிஷா,செல்வரூபன், காண்டீபன், துவாகரன்,பிரசாத், நிதர்சன், திருஜா, நிருஜா, நிதுஜா, தனிலா, திவ்யா, திவான், தமிழரசி, தனுஷா, தனேஸ்வரன், தனுசாந், திருஜன், சந்தியா, சஞ்ஜே, சந்தோஷ், சுவேதா ஆகியோரின் பேர்த்தியும் நிதுஷா, நிஷோக், நிமிதா, அபினாஸ், விதுசனா, அர்ஜீன், காவ்யா, ஷயானா, ஹஸ்னியா, றோகிட், சமந்தா ஆகியோரின் பூட்டியும் தர்மலிங்கம் (முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்- உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, முன்னாள் அதிபர்) அவர்களின் சிறிய தாயாரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 2020.02.14 வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

பாடசாலை வீதி,
கரணவாய் மத்தி, கரவெட்டி

தகவல்:- குடும்பத்தினர்
0212263567, 0776969423

# பாதயாத்திரை ஆரம்பம்







(குப்பிழான்)

சைவப் பெருமக்களால் அனுஷ்டிக்கப்படும் மகிமை மிக்க சிவ விரதமான மகா சிவராத்திரியை முன்னிட்டு உலக சைவத்திருச் சபையின் ஏற்பாட்டில் திருக்கேதீஸ்வர திருத்தலப் பாதயாத்திரை நேற்றுப் புதன்கிழமை காலை 9 மணியளவில் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பமானது.

சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து அரோகரா கோசத்துடன் வெள்ளி வேலுடன் ஆலய உள்வீதி மற்றும் வெளிவீதியை அடியவர்கள் வலம் வந்தனர்.

அதனைத் தொடர்ந்து பாத யாத்திரைக்கான ஊர்தியில் வைக்கப்பட்டிருந்த திருவண்ணாமலையிலிருந்து எடுத்து வரப்பட்ட சிவலிங்கப் பெருமானுக்கு விசேட தீபாராதனை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து உலக சைவத்திருச் சபையின் இலங்கைக்கான தலைவர் கதிர் குமாரசாமி சுமுக லிங்கம் சிவாச்சாரியார் தலைமையில் அரோகராக் கோசத்துடனும், திருமுறைப் பாராயணங்களுடனும் திருக்கேதீஸ்வர திருத்தலப் பாதயாத்திரை ஆரம்பமானது.

இந்தப் பாத யாத்திரையில் யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த அடியவர்களுடன் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல அடியவர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

குறித்த பாதயாத்திரை தொண்டைமானாறு- பருத்தித்துறை வீதியூடாக இன்று வியாழக்கிழமை இரவு நல்லை ஆதீனத்தைச் வந்தடையும். மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் நல்லூர்க் கந்த சுவாமி ஆலயத்திலிருந்து புறப்படும் பாதயாத்திரை மகா சிவராத்திரி அன்று எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை திருக்கேதீஸ்வர ஆலயத்தைச் சென்றடையுமென சுமுக லிங்கம் சிவாச்சாரியார் தெரிவித்தார். (இ-18)

# மலையகத் தமிழர்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் மாபெரும் சித்திரக் கண்காட்சி







(பத்தனை)

மலையகத் தமிழர்களின் வாழ்வியல் மற்றும் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பிரதிபலிக்கும் வகையிலான மாபெரும் சித்திரக் கண்காட்சி, பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பமானது.

கொட்டகலை பிரதேச சபையின் தவிசாளர் ராஜமணி பிரசாந்த் தலைமையில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில், ஹற்றன் கல்வி வலயத்தின் உயரதிகாரிகள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

'முகவரி வர்ணப்பிரவாகம்' எனும் தொனிப்பொருளின் கீழ் நடைபெறும் இந்த சித்திரக் கண்காட்சியை, தமிழ்ப் பிரிவு மாணவர்களே ஏற்பாடு செய்துள்ளனர். அவர்களின் கடின உழைப்பாலேயே மலையகத் தமிழர்களின் வாழ்வியல் ஓவியங்களாக காட்சியளிக்கின்றன.

இந்தக் கண்காட்சி நாளை 14 ஆம் திகதி வரை காலை 9.30 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறும் என விழா ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (இ-7)


ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

அன்னை மடியில் 09 - 01 - 1945

இறைவன் அடியில் 15 - 01 - 2020



அமரர்.

திருமதி சுபத்திராதேவி தணிகாசலம்பிள்ளை

15.01.2020 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

காலம்:- 14.02.2020 வெள்ளிக்கிழமை
நேரம்:- முற்பகல் 10.30 மணி
இடம்:- அன்னாரது இல்லம்

"சுபஸ்தான்"
1036(672),
காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
021 222 5325

(C-9226)

இங்ஙனம்
கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளை
(முன்னாள் மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
மத்திய கல்வி அமைச்சின் முதுநிலை கல்வி ஆலோசகர்)
குடும்பத்தினர்.


# உணவு தயாரிப்பு தொழில் முனைவோருக்கான சர்வதேச உணவு ஆய்வகம் இன்று திறப்பு



(கொழும்பு)

சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில் முனைவோரின் உணவு தயாரிப்புகளை ஆய்வு செய்து சர்வதேச மட்டத்தில் தரச்சான்றிதழ் வழங்குவதற்கான உணவு ஆய்வகம் **(Food Laboratory)** நிறுவப்படவுள்ளதாக கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

கைத்தொழில் அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இதனைத் தெரிவித்துள்ளது.

அமைச்சின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

தற்போதைய தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன், மனித வாழ்க்கை மிகவும் பரபரப்பாகிவிட்டது. இந்தக் காலகட்டம் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு ஒரே மாதிரியான அதாவது இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் வாழ்க்கை முறையை முன்னிட்டு செயற்கை மற்றும் துரித உணவை பயன்படுத்துவதற்கு பழகியுள்ளனர்.

இதன் விளைவாக, பதப்படுத்தப்பட்ட உணவுத் **(processed food)** தொழிலுக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆனால் உணவை பயன்படுத்தும்போது. உணவின் தரத்தில் பிரச்சினைகள் உள்ளன.

ஆனால் சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் துறையில் தொழில் முனைவோருக்கு அவர்கள் தயாரிக்கும் உணவுகளின் தரத்தை பரிசீலிப்பதற்கு போதியளவு ஆய்வக வசதிகள் இலங்கையில் இல்லை என்பதோடு, இந்த தேவையை பூர்த்தி செய்ய தலைநகரில் போதுமான ஆய்வக வலையமைப்பு வசதிகள் தற்போது இல்லை.

உணவுத் தொழில் துறையில் தொழில்முனைவோரின் இந்த சிக்கலை உணர்ந்து, இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி சபை 50 ஆண்டு நிறைவை அடைந்துள்ள இத்தருணத்தில் அதற்கு ஏற்றவாறு சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில் முனைவோரின் உணவுப் தயாரிப்புகளை ஆய்வு செய்து சர்வதேச மட்டத்தில் தரச்சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கானஉணவு ஆய்வகத்தை (Food Laboratory) நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த உணவு ஆய்வகத்தை இன்று வியாழக்கிழமை கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சர் விமல் வீரவன்ச மக்களிடம் கையளிக்கவுள்ளார். (ஐ)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## இராசிக் குறியீடுகளை பயன்படுத்தும் விதம்

துலாம் இராசியின் உருவம் ஒரு கையில் தராசு ஏந்தி நிற்கும் மனிதன் ஆவான். தராசு பெரும்பாலும் வியாபார நிறுவனங்களிலேயே காணப்படும்.

இதனால் துலாம் இராசிக்காரர்கள் வியாபார தந்திரம் உடையவர்கள் என்றும் எதையும் சீர் தூக்கிப்பார்த்து திறம்பட செயற்படக் கூடியவர்கள் என்றும் கூறப்படுகிறது. எந்த ஒரு சூழ்நிலையிலும் நடுநிலை தவறாத வர்கள்.



துலாம்

# கைதடி யாழ்.சித்த போதனா வைத்தியசாலையில் நவீன சித்த மருந்து உற்பத்திப் பிரிவு திறப்பு



(கொடிகாமம்)

கைதடி யாழ்.சித்த போதனா வைத்தியசாலையின் நவீன சித்த மருந்து உற்பத்திப் பிரிவுக்கான திறப்பு விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கைதடி சித்த போதனா வைத்தியசாலையின் மருத்துவ பொறுப்பதிகாரி டாக்டர் ஜ.ஜெபநாம கணேசன் தலைமையில் கைதடி சித்த போதனா வைத்தியசாலையின் மருந்து உற்பத்தி பிரிவுக்கான மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சுதேச மருத்துவத்திற்குரிய மத்திய அரசாங்க செயலாளர் விஜிதா செனவிரத்ன (state secretary of indigenous medical services), சிறப்பு விருந்தினராக ஆயுர்வேத ஆணையாளர் (commissioner of ayurveda) கே.டி.எஸ். குமாரதுங்க, வடமாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் (provincial commissioner of indigenous medicine Northern province) டாக்டர் திருமதி சியாமா துரைரட்னம் மற்றும் ஆயுர்வேத சித்த மருத்துவ உயரதிகாரிகள், வைத்தியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் சித்த மருத்துவ உற்பத்திப் பிரிவினை திறந்து வைத்ததுடன் சித்த மருந்து செய்கையை ஆரம்பித்து மூலிகை மரக் கன்றுகளையும் நாட்டினர். (ஜ-114)

## மக்கள் முறைப்பாடு; ஜனாதிபதி பணிப்பு

# யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரிக்கு அங்கஜன் தலைமையிலான குழு விஜயம்

### மைதானம், ஆசிரியர் இடமாற்றப் பிணக்குகளுக்கு தீர்வு



(யாழ்ப்பாணம்)

மக்களாலும் பிரதேச இளைஞர்களாலும் கனடா பழைய மாணவர்களாலும் ஜனாதிபதியிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதனின் ஆலோசனையில் உயர் கல்வி அதிகாரிகள் யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரிக்கு திடீர் விஜயத்தை நேற்று முன்தினம் மேற்கொண்டனர்.

தவறான ஆசிரிய இடமாற்றங்களை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் நிறுத்தியும் ஸ்ரீ நல்லை சட்டநாதர் சிவன் ஆலயத்திற்குரித்தான பாடசாலையினதும் நொதேண் விளையாட்டுக் கழகத்தினதும் பாவனையிலுள்ள விளையாட்டு மைதானத்தை ஆலய தர்ம கர்த்தா, கல்வித் திணைக்களம், நொதேண் விளையாட்டுக்கழகம் ஆகிய முத்தரப்பினர் கொண்ட உடன் படிக்கை மூலம் காலாவதியான குத்தகை உடன்படிக்கையை மீளப் புதுப்பிப்பதாகவும் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (இ-7)



மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையின் அனுசரணையில் யாழ்.நீரிழிவுக் கழகத்தினரால் கோண்டாவில் மத்தி கிராம முன்னேற்றச் சங்கத்தில் அண்மையில் நடைபெற்ற நீரிழிவு தொடர்பான செயலமர்வின் போது யாழ்.நீரிழிவு கழகத் தலைவர் மைக்கல் மக்கள் மத்தியில் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கொடிகாமம்)

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் 15 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் புத்தூர்சந்தி சியாமளா மில் வீதியில் அமைந்துள்ள மீசாலை வீரசிங்கம் விளையாட்டு மைதானத்தில் நடை பெறும். அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக (காணி அபிவிருத்தி) மேலதிக அரசாங்க அதிபர் சு.முரளிதரன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி பணிப்பாளர் வ.நடராசா ஆகியோர் கலந்து கொள்வர். (ஜ)

# இராசி பலன்

**மீனம்** — தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், களஸ்திர நன்மையுண்டு, புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**மேடம்** — உற்சாகத்தேடு பணிபுரிவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்** — எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வருமானம் திருப்திகரமாக அமையும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** — பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, சந்தோசமான அனுபவங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** — இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, விரயங்கள் மேலோங்கும் நாள், பிரயாண பயமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | ராகு |
| சூரி, புத | இராசி பலன் — கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் சதயம், பூரட்டாதி | | |
| சனி, கேது, குரு, செவ் | | | சந் |

13.02.2020

மாசி 01, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.34 மணிக்கு

பஞ்சமி பின்னிரவு 2.34 மணிவரை

அத்தம் பிற்பகல் 2.38 மணிவரை

சுபநேரம் 8.04-9.34 மணிவரை

இராகுகாலம் 2.04-3.34 மணிவரை

வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகும்.

வளவன்

**கடகம்** — பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், புதிய முயற்சிகள் எளிதில் கைகூடும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** — நீண்ட நாளை பிணக்குளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்திகரமானதாக அமையும், எதிர்பார்த்த உதவி கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** — நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**தனுசு** — நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — தொலைபேசி வழித் தகவல்கள் வந்து மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், உறவினர் பகை அகலும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்** — சுப விரயங்கள் ஏற்படும் நாள், குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**கன்னி** — ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாட சாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் பதில் அதிபர் திருமதி.சுரேந்திரா சூரியராஜா தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

(யாழ்ப்பாணம்)

மூளாய் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம், இல்ல மெய்வல்லுநர் போட்டி என்பன நாளை 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அதிபர் இ.லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக சங்கானை வேள்ட் விஷன் திட்ட முகாமையாளர் யூட் நிசாந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

(யாழ்ப்பாணம்)

செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 13 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் பா.உதயசேகர் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக செம்பியன்பற்று பிலிப்னேரியர் ஆலய பங்குத் தந்தை அருட்திரு.ஜே.பி.ஜோதிநாதன் அடிகளார், சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணி பிரதேச செயலக தலைமைக் கிராம உத்தியோகத்தர் வ.தவராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியள வில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி. த.சண்முகானந்தம் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் கலந்து கொள்வார். (இ-5)

# சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்கள் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாயமும் கமநல சேவைகளும் கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சால் சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களை கௌரவிக்கும் விழா யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை வடமாகாண கமத்தொழில் அமைச்சின் செயலர் தெய்வேந்திரம் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், கௌரவ விருந்தினர்களாக தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் நிலையத்தின் பணிப்பாளர் சீ.பெரியசாமி மற்றும் கமத்தொழில்சார் வைத்தியர்கள், விவசாய போதனாசிரியர்கள், கமத்தொழில்சார் உத்தியோகத்தர்கள், விவசாயிகள், பண்ணையாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-7)

# சிகை ஒப்பனையாளர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 72 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நாவலர் மண்டபத்தில் கி.இரத்தினராசா தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி.சியாமளா சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தை சுத்தமாக்கும் நோக்கில் சூழல் சார்ந்து செயற்படும் அமைப்புக்களுடனும் தன்னார்வ செயற்பாட்டாளர்களுடனான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை சாட்டி கடற்கரையில் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெறும். (இ-7)

ஸ்ரீ ராம ஜெயம்

இணுவில் திருப்பதி

அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய

இலட்சார்ச்சனை விழா 2020

13.02.2020– 22.02.2020 வரை

கோவிந்தன் அடியார்களே!

வேண்டுவார்க்கு வேண்டுவன தந்தருளும் வண்ணம் கோவில் கொண்டிருக்கும் நித்திய கல்யாண மூர்த்தியாக அருள்பாலிக்கும் ஸ்ரீ நிவாசப் பெருமானுக்கு நிகழும் விகாரி வருடம் தைத் திங்கள் 29ஆம் நாள் (13.02.2020) தொடக்கம் மாசித் திங்கள் 10ஆம் நாள் (22.02.2020) வரை இலட்சார்ச்சனை நடைபெற திருவருள் கூடியுள்ளது. தச அவதார மூர்த்தியான எம்பெருமானுக்கு பத்து அந்தண ஆச்சாரியர்கள் ஒன்று கூடி எம்பெருமானுக்கு இக்கைங்கரியம் நடைபெறவுள்ளதால் அடியார்கள் யாவரும் இவ்வாலயத்திற்கு வந்து இந்த அர்ச்சனையிலும் தினமும் நடைபெறும் மகாயாகத்திலும் கலந்துகொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

தினமும் **மாலை 4.30** மணிக்கு ஆரம்பமாகி **7.30** மணிக்கு நிறைவடையும். 22.02.2020 சனிக்கிழமை இலட்சார்ச்சனை பூர்த்தி. காலை 7.00 மணி முதல் பகவத்கீதா ஹோமம் ஆரம்பமாகி தொடர்ந்து தாராஹோமம், பூர்ணாகுதி, சர்வ உபசார பூஜை நடைபெற்று கும்ப வீதியுலா, கும்ப புரோட்சணம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

01ம் நாள் (13.02.2020) மஹா சுதர்சன சக்கர ஹோமம்– வீரம் பெறவும் மற்றும் சகலவித தடை விலகவும்.
02ம் நாள் (14.02.2020) கயக்கிரீவ ஹோமம்/ மேதாசூக்த ஹோமம்– சிறந்த கல்வியைப் பெற
03ம் நாள் (15.02.2020) தன்வந்திரி ஹோமம் / ஆயுஷ்ய ஹோமம்–நோய் நொடி நீங்க
04ம் நாள் (16.02.2020) இலக்ஷ்மி நரசிம்ம ஹோமம் / தீயசக்திகளில் இருந்து விலகி இலக்ஷ்மி கடாட்சம் பெற
05ம் நாள் (17.02.2020) சந்தானகோபால ஹோமம் – பிள்ளைப்பாக்கியம் பெறுவதற்கு
06ம் நாள் (18.02.2020) இலட்சுமி ஹோமம்/தன ஆகர்ஷண லக்சுமி ஹோமம்–ஸ்ரீ சூக்த ஹோமம்–செல்வம் பெறுவதற்கு
07ம் நாள் (19.02.2020) நாராயண சூக்த ஹோமம், புருஷ சூக்த ஹோமம் – சர்வசித்தி
08ம் நாள் (20.02.2020) சம்பரண சூக்த ஹோமம் – நாட்டில் உள்ள குழப்பங்கள் நீங்க
09ம் நாள் (21.02.2020) விஷ்ணு சகஸ்ரநாம ஹோமம் – சர்வ சித்தி
10ம் நாள் (22.02.2020) பகவத் கீதா ஹோமம் – சர்வசித்தி பெறல், தாரா ஹோமம், மகா பூர்ணாகுதி,

**பகல் 11.30 மணிக்கு கும்ப வீதியுலா, சுவாமி வீதியுலா, கும்ப புரோட்சணம், பெரிய பெருமாள் அருள் தரிசனம் தொடர்ந்து அன்னதானம்.**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விசேட ஹோமங்கள் இக்காலத்தில் நடைபெறவிருப்பதால் அடியவர்கள் தங்களுக்கான பரிஹார ஹோமத்தைத் தேர்வு செய்து முற்கூட்டியே ஆலய காரியாலயத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

முக்கிய குறிப்பு: விஷேட ஹோமங்கள் நடைபெறுவதால் அடியார்கள் தங்களின் வேண்டுதலுக்கேற்ப ஹோமத் திரவியங்களை ஆலயத்திற்கு சமர்ப்பிக்க முடியும்.

தொடர்புக்கு ஆலய காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

(22.39)

தொலைபேசி இல:
021 224 2300, 077 725 2476

ஆலய தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம்

# அரசாங்கத்தை வீழ்த்த ஐ.தே.க. சதித்திட்டம்

## சு.க.பேச்சாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ரணில் - சஜித்துக்கு இடையில் தலைமைத்துவம் தொடர்பான பிரச்சினை சென்று கொண்டிருக்க மறுபுறம் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான சதித்திட்டங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி சிறப்பாக முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டினார்.

அரசாங்கத்தின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் இலக்கு வைத்து இவ்வாறான சதித்திட்டங்கள் தீட்டப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# அனைத்துப் பரீட்சைகளுக்குமான விண்ணப்பம் ஒன்லைன் மூலம் கோரல்

(கொழும்பு)

க.பொ.த. சாதாரணதரம், க.பொ.த. உயர்தரம் மற்றும் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை இணையவழி மூலம் கோர பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

டிஜிற்றல் மயப்படுத்தலை நோக்காக கொண்டு இந்நடவடிக்கையை எடுத்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிய முறையின் கீழ் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் தனிப்பட்ட இலக்கம் வழங்கப்படும் என்பதோடு, குறித்த இலக்கம் பரீட்சைகள் திணைக்களத்தின் தரவுத்தளத்துடன் (database) இணைக்கப்படும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி. பூஜித தெரிவித்தார்.

மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் இணைபாட விதான நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக தனிப்பட்ட மாணவர் இலக்கமானது, மாணவர் தரவுத்தளத்துடன் இணைக்கப்படும் என்பதோடு, இதன் மூலம் இலகுவாக மாணவர்களைஅடையாளம் கண்டு கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு க.பொ.த. உயர்தர பாடங்களான கணக்கியல், உயிரியல் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானம் ஆகியவற்றுக்கு சிக்கலான கணிப்புகளை மேற்கொள்ள முடியாத கணிப்பான்கள் (non-programmable calculators) பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்குவது பற்றி கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



யாழ்.ஊர்காவற்றுறை கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில், அதிபர் அருட்சகோதரி றோஷறி செபஸ்ரியான் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், கௌரவ விருந்தினர்களாக ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப்பணிப்பாளர் மு.சத்தியசீலன், மண்டைதீவு பங்குத்தந்தை வண.மனுவேற்பிள்ளை டேவிட், தீவகவலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி தி.துஷ்யந்தி, தீவக வலய விஞ்ஞானபாட ஆசிரிய ஆலோசகர் பு.சிறீஸ்கந்தராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

### கொரோனா வைரஸ் தொற்று அறிகுறியில்லை

# தியத்தலாவையில் தனிமைப்படுத்தப்பட்ட 33 மாணவர்கள் 16ம் திகதி வெளியேற்றம்

## 15 பேர் தொடர்ந்தும் கண்காணிப்பில்

(கொழும்பு)

தியத்தலாவை இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்ட சீனாவின் வுஹானிலிருந்து அழைத்து வரப்பட்ட 33 மாணவர்களும் 16 ஆம் திகதி வெளியேற்றப்படுவார்கள் என்று தலைமை தொற்று நோயியல் நிபுணர் சுதாத் சமரவீர தெரிவித்தார்.

குறித்த 33 மாணவர்களும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி கொரோனா வைரஸ் பரவலின் மையப் புள்ளியான சீனாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு, இவ்வாறு தியத்தலாவை முகாமில் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்நிலையிலேயே அவர்களின் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடையும் தறுவாயில் அவர்களின் விடுவிப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே தொற்று நோயியல் நிபுணர் சுதாத் சமரவீர மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன் 33 மாணவர்களும் கொரோனா தொற்றுக்குள்ளானதாக எந்த அறிகுறியும் இல்லை. அவர்கள் ஆரோக்கியமாக உள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை அங்கொடவிலுள்ள தொற்று நோய்கள் தடுப்பு வைத்தியசாலை, கண்டியிலுள்ள தேசிய வைத்தியசாலை, கராப்பிட்டி, ராகம, குருநாகல், யாழ்ப்பாணம், கம்பஹா, பதுளை மற்றும் நீர்கொழும்பிலுள்ள பொது வைத்தியசாலைகளில் 15 இலங்கையர்கள் இன்னும் கண்காணிப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 8 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் புங்குடுதீவு மகா வித்தியாலயம் மற்றும் புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய மாணவர்களுக்கு ஊக்கி அமையத்தாலும் யாழ்.இந்துக்கல்லூரி 2005 உயர்தரப் பிரிவினராலும் 8 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட் டன. (இ-7)

# அரசாங்க துறையைக் கண்காணிக்க உளவுத்துறை குழுக்கள் நியமனம்

(இறக்காமம்)

அரசாங்கத்தினதும் ஜனாதிபதியினதும் எதிர்பார்ப்பு நாட்டில் இன ஒற்றுமை மற்றும் உற்பத்தி சார்ந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமென்பதேயாகும் என கிழக்கு மாகாண சபை முதலமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ் தெரிவித்தார்.

இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எம்.நஸீர் தலைமையில் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற தையல் பயிற்சி கண்காட்சி கூட திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்க ஊழியர்களாகிய நாம் மக்களின் வரிப் பணத்திலேயே நமது ஜீவனோபாயத்தைக் கழித்து வருகின்றோம்.

இந்நிலையில் அலுவலக தேவைகளுக்காக வரும் மக்



களை நாளை வாருங்கள், நாளை மறுதினம் வாருங்கள் என்று அலைய வைக்கின்றோம். இவ்வாறு மக்களை ஏமாற்றிய காலம் மலையேறி விட்டது.

ஜனாதிபதி நாட்டின் அரச நிர்வாக துறையை மேம்படுத்தி அதனூடாக மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டும் என்பதற்காக அரச உத்தியோகத்தர்களின் நடவடிக்கையைக் கண்காணிப்பதற்காக தேசிய உளவுத்துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளார்.

காரியாலயத்துக்கு வரும் ஒருவரின் தேவையை 10 அல்லது 15 நிமிடங்களுக்குள் முடித்து அனுப்பிவிட வேண்டும். இல்லாவிட்டால் நாம் மாட்டிக் கொள்ள நேரிடும். இதனை ஒவ்வொரு அரச உத்தியோகத்தரும் நன்கு புரிந்துகொண்டு செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### ரணில் அரசின் தவறுகளால்

# பாரிய மின்சார நெருக்கடி தற்போது தலைதூக்கியுள்ளது

(கொழும்பு)



ஒரு மின்சாரத் திட்டத்தைக் கூட கடந்த அரசில் முன்னெடுக்காத நிலையில் தற்போது பாரிய மின்சார நெருக்கடி தலைதூக்கியுள்ளதோடு இதனைச் சீர்செய்ய தனியாரிடமிருந்து 200 மெகாவோள்ட் மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக அமைச்சர் அமரவீர அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ரணில் தலைமையிலான பொருளாதார குழு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களைச் செயற்படுத்தாமல் இழுத்தடித்ததாக குறிப்பிட்ட அவர், மின்கொள்வனவு செய்வதை எதிர்பார்த்து பல தனியார் மின் உற்பத்தி இயந்திரங்கள் துறைமுகங்களை அடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த அரசின் தவறுகள் காரணமாக மின்சார நெருக்கடி நிலை தலைதூக்கியுள்ளது. மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் நுரைச்சோலை உட்பட பல மின்சாரத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

எரிபொருள் ஊடாக மின் உற்பத்தி செய்ய அதிகம் செலவாகும் நிலையில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு பெருமளவு நிதி வழங்க வேண்டியுள்ளது.

இந்நிலையிலே தனியாரிடமிருந்து 200 மெகாவோள்ட் மின்சாரம் பெற அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தனியார் துறைக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. வேண்டுமென்றே கடந்த காலத்தில் புதிய திட்டங்கள் முன்னெடுக்கப் படவில்லையா? என்ற சந்தேகமும் தலைதூக்கியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு அரசியல் இலாப நடவடிக்கை

## திஸ்ஸ சாடல்



(கண்டி)

தற்போது நாட்டில் பாரிய நிதிப் பற்றாக்குறை காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இருப்பினும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் அரசியல் இலாபத்தை அடைந்துகொள்ளும் நோக்கத்துடன் ஒரு இலட்சம் வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கு ஒரு முயற்சியை அரசாங்கம் கையில் எடுத்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

கண்டியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அவர், இதுபோன்ற முயற்சிகளால் பொதுமக்களுக்கு ஏமாற்றம் மட்டுமே மிஞ்சும் எனத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் ஒரு பெரிய பற்றாக்குறையை சந்தித்துள்ளதாகவும், பொதுமக்கள் அரசாங்கத்தின் மீது தங்கள் அதிருப்தியை வெளியிட்டு வருவதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எனவே நாட்டை ஸ்திரப்படுத்த, அரசாங்கம் மேலும் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.


ஆனால் நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கு பதிலாக வெறும் அரசியல் நடவடிக்கைக்காக பொதுமக்களை ஏமாற்றும் முயற்சியில் பல்வேறு அறிவிப்புக்களை அரசாங்கம் வெளியிடுகின்றது என திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சாட்டினார். (ஐ)


## தமிழக வாக்குக்காக 13 ஐ நினைவுபடுத்திய மோடி

# தமிழ் இனவாதிகளை மகிழ்வித்து

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது

### குணதாச அமரசேகர கூறுகிறார்





(கொழும்பு)

**தமிழ் இனவாதிகளை மகிழ்வித்து நாட்டில் ஒருபோதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது எனவும் அப்பாவி தமிழ் மக்களை அந்த இனவாதிகளிடம் இருந்து விடுவிப்பதே நல்லிணக்கத்தை அடைய முதல் நடவடிக்கை எனவும் சிங்கள தேசிய அமைப்புக்கள் ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.**

வடக்கில் அரசியலில் ஈடுபட்ட இனவாதிகள் மக்களுக்காக மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை செலவிடவில்லை. மத்திய அரசாங்கம் வடக்கு மக்களை கவனிப்பதில்லை எனக் காட்டவே அவர்கள் முயற்சித்தனர். இதனால், அரசாங்கம் புத்திசாலித்தனமாக சிந்தித்து வடக்கில் வறிய மக்களுடன் கொடுக்கல்-வாங்கல்களில் ஈடுபட வேண்டும்.

இந்தியாவில் குடியுரிமை சட்டம் கொண்டு வந்த போது, எமது நாட்டின் தமிழர்கள் இந்தியக் குடியுரிமையைக் கேட்டனர். அப்போது இலங்கையில் தமிழர்களுக்கு தொந்தரவுகள் இல்லை என இந்தியா கூறியது. அப்படிக் கூறி குடியுரிமையை வழங்கவில்லை.

அதேவேளை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இம்முறை இந்தியாவுக்கு சென்றிருந்த போது, பிரதமர் மோடி 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் பற்றிக் கேட்டார். இந்தத் திருத்தச் சட்டம் பெரிய தேவை கருதி கொண்டு வரப்பட்டதல்ல. மோடி இதுபற்றி கேட்ட போது எமது பிரதமர் அமைதியாக இருந்தார். அதனைப் பாராட்ட வேண்டும். 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான பிரச்சினையைப் பலவந்தப்படுத்தி தீர்க்க முடியாது.

அதேபோல் நாம் மோடியை படிக்க வேண்டும். எமது நாடு பிளவுபடுவதை அவர் விரும்பவில்லை. அவருக்குத் தேவை தமிழ் நாட்டின் வாக்குகள். அதற்காகவே அவர் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நினைவுபடுத்துகிறார். அத்துடன் இம்முறை சுதந்திர தினத்தில் தேசிய கீதம் சிங்களத்தில் மட்டும் பாடப்பட்டதன் மூலம் இனவாதத் தலைவர்களால் தற்போதைய அரசாங்கத்தை ஆட்டுவிக்க முடியாது என்பதை வடக்கிலுள்ள அப்பாவி தமிழ் மக்கள் புரிந்துகொண்டனர். இது அந்த இனவாதிகளுக்கு கிடைத்த பெரிய தோல்வி எனவும் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


**ஆட்கள் தேவை**

முல்லைத்தீவுப் பகுதியில் தோட்டமொன்றில் காவலுக்கு ஆள் தேவை. தோட்டங்களில் தனியாளாக வேலை செய்து பழக்கம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் காவலுக்கு மட்டும் மாதத்துக்கு ரூபா 12000/= மேலதிக வேலைகளுக்கு வேலைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். குடும்பமாகத் தங்குவதற்கான வசதி உண்டு. தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளரின் அத்தாட்சிக் கடிதம், மேலதிக சிபாரிசுகள் தேவை. (C-9221)

தொலைபேசி:- 077 168 1697, 077 113 3667

**தற்காலிக பணியாளருக்கான விண்ணப்பம் கோருதல்**

யாழ்.மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்திற்கு தற்காலிக கணக்கு லிகிதருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்களது சுயவிபரங்களுடன் 19.02.2020 இற்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு தங்களது விண்ணப்பங்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

தகவல்:- தலைவர்
யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் (வ.து)
இல.100, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 222 9797
077 248 9727 (C-9220)

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள நல் எண்ணெய் ஊற்றும் (15HP) இயந்திரம் ஒன்றும் கடைகளில் பாவிக்கக்கூடிய (Cash Register) காசுப்பதிவு மெஷின் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. (C-9219)

தொடர்பு:- 077 464 4657

**31ம் நாள் நினைவஞ்சலி**

அமரர். வயிரவன் குணமணி



பிறப்பு 27.09.1955
இறப்பு 14.01.2020

எமது கல்லூரியின் ஆசிரியர் சசிக்குமார் அவர்களின் அன்புத்தாயார் அமரர். வயிரவன் குணமணி அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(2230)

ஆசிரிய நலன்புரிசங்கம்,
கிளி/ பளை மத்திய கல்லூரி.

**கண்ணீர் அஞ்சலி**

அமரர் இஸ்பிரியோன் செல்வின் மிராண்டா



எமது பாடசாலையின் ஆசிரியையான செல்வி S.M.மேரி அனற் மிராண்டா அவர்களின் அன்புத் தந்தையார் அமரர் இஸ்பிரியோன் செல்வின் மிராண்டா அவர்கள் 11.02.2020 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் இவரது இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(2235)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/புனித சாள்ஸ் ம.வி., பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**விண்ணப்பம் கோரல்**

இந்து, பௌத்த கலாசார பேரவையின் தலைமைக்காரியாலயத்திற்கு முகாமைத்துவ உதவியாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்.

- கல்வித்தகைமை-G.C.E.A/L.
- 20-40 வயதிற்கு உட்பட்டவர்கள்.
- தமிழிலும் ஆங்கிலத்திலும் கணனியில் பணியாற்றிய 3 வருட அனுபவம் தேவை.
- ஆண்கள், பெண்கள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் பெப்ரவரி 29 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இந்து பௌத்த கலாசார பேரவை,
தலைமைக்காரியாலயம்,
சங்கானை வீதி,
அச்சுவேலி. (2234)

யாழ்ப்பாணம்
உயர்கலைக் கல்லூரி,
ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 271 1181, 076 608 7223

## மிருகங்களின் சரணாலயமாக மாறிவரும் கிளிநொச்சி பசுமைப் பூங்கா

(முறிகண்டி)

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பசுமைப் பூங்கா தற்போது மாடுகளின் சரணாலயமாக மாறி வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கரைச்சிப் பிரதேச சபையின் பராமரிப்பிலுள்ள குறித்த பூங்கா பல மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. குறித்த பூங்காவின் பாதுகாப்பு கட்டமைப்புக்கள் சீரின்மையால் குறித்த நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இரவு வேளைகளில் கால்நடைகள் தமது ஓய்வுக்காக குறித்த பகுதியை பயன்படுத்துகின்றன என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.



கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கான ஒரேயொரு பொழுது போக்கு மையமாக காணப்படும் குறித்த பூங்காவில் போதிய பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தி, பொதுமக்கள் பயன்படுத்தும் பகுதியாக மாற்றித் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கட்டாக்காலி மாடுகளின் தொல்லை கிளிநொச்சி நகர்ப் பகுதியில் தொடர்ந்தும் காணப்படுவதனால் அவற்றைக் கட்டுப்படுத்தி, பாதுகாப்பான போக்குவரத்திற்குரிய ஏற்பாடுகளை ஏற்படுத்தித் தருமாறு பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.(9-100)




## தளபாடங்கள் வழங்கி வைப்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் பிரித்தானிய அபயம் நிதியத்தின் ஊடாக பிரித்தானியாவில் வசிக்கின்ற ஜெயக்குமார் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்பில் கிளிநொச்சி செல்வாநகர் பாட சாலை மாணவர்களுக்கான தளபாடங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலையில் நிலவி வந்த தளபாட பற்றாக்குறையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்யும் வகையில் மூன்று இலட்சத்து 18 ஆயிரம் ரூபா பெறுமதியில் குறித்த தளபாடங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு 30 ஆயிரம் ரூபா பெறுமதியில் மாணவர்களுக்கான பயிற்சி புத்தகங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர் சி.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரும் 'கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் தலைவருமான வைத்தியர் த.சத்தியமூர்த்தி, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். (9-100)

## பாலத்திற்கான அடிக்கல் நாட்டல்



(பரந்தன்)

கிளிநொச்சி ஆனந்தபுரம் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கம் செல்லும் வீதியிலுள்ள பாலத்திற்கான அடிக்கல்லினை நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நேற்று முன்தினம் நாட்டி வைத்தார். இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். குறித்த பாலம் அமைப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனினால் 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (9-100-312)

## மன்னார் புதைகுழி எச்சங்கள் வைக்கப்பட்ட அறை கதவு உடைப்பு

### விசாரணை 25 ஆம் திகதி

(மன்னார்)

மன்னார் சதொச வளாகத்தில் காணப்பட்ட மனித புதைகுழியின் எச்சங்களை பாதுகாப்பாக வைத்திருந்த மன்னார் நீதிமன்ற அறையின் ஜன்னல் கதவுகள் திறக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதோடு, கதவு உடைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டமை குறித்து மன்னார் பொலிஸார் மன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் 25 ஆம் திகதி மன்றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாக மன்றில் முன்னிலையான சட்டத்தரணி எஸ்.டினேஸன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கடந்த வருடம் கண்டு பிடிக்கப்பட்ட மனித புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மன்னார் "சதொச" வளாகத்தில் அகழ்வின் போது மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் மன்னார் நீதிமன்றத்தில் பாதுகாப்பாக வைத்திருந்த அறையின் ஜன்னல் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதுடன் கதவும் உடைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மன்றில் தெரிவித்ததுடன் கைரேகை நிபுணர்களின் விசேட நடவடிக்கைக்காக குறித்த வழக்கு பிறிதொரு வழக்காக மன்னார் பொலிஸாரினால் மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரச சட்டத்தரணியினால் மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பணத்திற்கு மறுமொழி வழங்கும் வகையில் இவ் வழக்கானது எதிர்வரும் 25 ஆம் திகதியும், "சதொச" அகழ்வின் போது கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் காணப்படும் தொல் பொருட்களை பிரித்து எடுப்பதற்கான வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் அழைக்கப்படுவதற்காக இவ் வழக்கு தவணையிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-285)

## உருத்திரபுரம் மேற்கில் மூத்தோர் சங்கம் ஆரம்பிப்பு

(சிவநகர்)

கிளிநொச்சி உருத்திரபுரம் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் புதிதாக மூத்தோர் சங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டு அதற்கான நிர்வாக தெரிவும் இடம்பெற்றது.

இதில் தலைவராக ச.மு.அருளம்பலம், உபதலைவராக நா.உலகநாதன், செயலாளராக நீ.குலேந்திரதாசன், உபசெயலாளராக பொ.தயாபரன், பொருளாளராக திருமதி.அபிராமி சின்னத்துரை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் 10 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.(9-254)

### இளைஞர் பாராளுமன்றத் தேர்தல்

## ஆர்வத்துடன் வேட்புமனு தாக்கல் செய்த இளைஞர் - யுவதிகள்



(மன்னார்)

இளைஞர் பாராளுமன்ற தேர்தல் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள நிலையில் வடக்கிலுள்ள இளைஞர்-யுவதிகள் நேற்று முன்தினமும் நேற்றும் அந்தந்த மாவட்ட செயலகங்களில் ஆர்வத்துடன் வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளனர்.

அந்த வகையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் உதவி அரச அதிபர் சிவராஜா தலைமையில் ஆரம்பமான குறித்த வேட்பு மனுத் தாக்கலில், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாகாண பணிப்பாளர் என்.எம். முனவ்பர், மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவி பணிப்பாளர் யு.எல்.ஏ.மஜித், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி என்.பூலோகராஜா, தேசிய சமமேளன பிரதிநிதி ஜசோதரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 14 இளைஞர்-யுவதிகள் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளனர்.





அதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் 22 பேர் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளனர். இதில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாண நிர்வாக உத்தியோகத்தர் அனீஸா அப்துல் காதர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி சறோஜா குகணேசதாசன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி மா.சசிகுமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு இவர்களுடைய வேட்பு மனுக்களை ஏற்றுக் கொண்டனர். இதேபோன்று ஏனைய மாவட்டங்களிலும் இளையோர் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

குறித்த இளைஞர் பாராளுமன்ற் தேர்தலுக்கான வாக்கெடுப்பு எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 8 மணி முதல் 4.30 மணிவரை இடம்பெறவுள்ளதோடு 15 வயது முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்-யுவதிகள் தங்களது பிரதேச செயலகங்களில் தமது வாக்குகளை அளிக்க முடியும். இதற்காக குறித்த வயதுக்குட்பட்ட இளைஞர்கள் www.nysc.lk என்ற இணையத்தளத்துக்குள் உட்பிரவேசித்து எதிர்வரும் 20 ஆம் திகதி நள்ளிரவு 12 வரை வாக்காளர்களாக தங்களை பதிவு செய்துகொள்ள முடியும். மேலதிக விபரங்களை பிரதேச இளைஞர் சேவை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.(9-281-285)

## மன். நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில்

# பாலைமீன், கவட்டி வளர்ப்பு தொடர்பில் ஆராய்வு



(மன்னார்)

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அச்சங்குளம் கிராமத்தில் நானாட்டான் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நீர் உயிர் வளர்ப்பு அபிவிருத்தி தொடர்பான மக்கள் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் தேசிய நீர் வழங்கல் ஆராய்ச்சி நிலையத்தின் தவிசாளர் பேராசிரியர் அ.அழகையா நவரட்ணராஜா கலந்து கொண்டார்.

இதன்போது அப்பகுதியில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் உள்ள நீர் உயிர் வளர்ப்பு தொடர்பாக மக்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன.

குறிப்பாக பாலைமீன் வளர்ப்புத்திட்டம், கவட்டி வளர்ப்புத்திட்டம் போன்றவற்றில் உள்ள சவால்கள் மற்றும் தீர்வுகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

இதன்போது தேசிய நீர்வழங்கல் ஆராய்ச்சி முகவரகத்தின் தவிசாளர் பேராசிரியர் அ.நவரட்ணராஜா, இத்திட்டங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக தாம் அதிக அக்கறை செலுத்துவதாகவும் உயிர் வளர்ப்பு திட்டத்தை ஊக்குவிக்கும் விதமாக 11 பயனாளிகளுக்கு மீன் குஞ்சு வளர்ப்பதற்கான உதவிகள் வழங்கப்பட இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் நீர் உயிர் வளர்ப்பு தொடர்பில் பொதுமக்களுக்கு இருக்கின்ற ஐயப்பாட்டுகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இது தொடர்பில் அப்பகுதியின் பங்குத்தந்தை அருட்பணி ஜீட் குரூஸ் அடிகளர், அச்சங்குளம் கிராம உத்தியோகத்தர் அன்று ப்ளசிடஸ் மார்க், பிரதேச செயலாளர் மாணிக்கவாசகர் சிறீஸ்கந்தகுமார், பிரதேசசபை தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி, கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து துறைசார் அதிகாரிகளின் பங்குபற்றலுடன் தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தார். சுமார் 2 மணித்தியாலங்கள் குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

கவட்டி வெளிநாடுகளில் அதிக கேள்வி உள்ள புரதச் சத்து நிறைந்த உணவு வகை என்பதனால் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து கவட்டி வளர்ப்பு ஊக்குவிக்கப்படுகிறது. மேலும் பாலைமீன் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் அதிக கேள்வியுள்ள மற்றும் சுவையான மீன்வகை என்பதனால் இம் மீன் வளர்ப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-285)

## பயிற்சி நிறைவு நிகழ்வும் கண்காட்சியும்

(பூநகரி)

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஒழுங்கமைப்பில் பூநகரி பிரதேச செயலக அனுசரணையுடன் பூநகரியில் கடந்த 12 மாதங்களாக நடைபெற்ற மனைப்பொருளியல் டிப்ளோமாச் சான்றிதழுக்கான பயிற்சி நெறி முடிவடைந்து எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் பயிற்சி நிறைவு நிகழ்வு விழாவும் கண்காட்சியும் நடைபெறவுள்ளதாக பயிற்சிப் பொறுப்பாசிரியை திருமதி த.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் ஆடை வடிவமைத்தல், பின்னல் வேலை, அழகுக்கலை, கேக் ஐசிங், மலர் ஒழுங்கமைப்பு, முதலுதவி உட்பட பல பயிற்சிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கான செய்முறை பயிற்சியும் எழுத்துப் பரீட்சையும் நடைபெற்றதாக ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்படுகிறது. (9-84)




## பாராளுமன்ற தேர்தலில் ஜி.ரி.லிங்கநாதன் போட்டி

(நெளுக்குளம்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் புளொட்டின் வன்னி மாவட்ட வேட்பாளர்களாக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனும், முல்லைத்தீவு வித்தியானந்தா பாடசாலையின் முன்னாள் அதிபர் கந்தையா சிவலிங்கமும் நிறுத்தப்படவுள்ளதாக தெரியவருகிறது.

வன்னி மாவட்டத்தில் முல்லைத்தீவு மற்றும் வவுனியாவில் தமது கட்சி சார்பில் இரு வேட்பாளர்களை களம் இறக்கவுள்ளதாகவும் இன்னும் ஓரிரு வாரங்களில் அந்தந்த மாவட்டக்குழு தீர்மானித்து அந்த வேட்பாளர்கள் யார் என்பதை இறுதி செய்து அறிவிப்பதாக புளொட்டின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் அண்மையில் வவுனியாவில் வைத்து தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் இவர்கள் இருவரையும் வேட்பாளர்களாக நிறுத்துவதாக கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள் சம்மதம் தெரிவித்துள்ளதுடன் விரைவில் அதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்க உள்ளதாக தெரியவருகிறது. (9-299)

## வவுனியாவில் இலங்கை போக்குவரத்து சபையின்

# உள்ளூர் பேருந்து சேவைகள் சீரில்லை; பாடசாலை மாணவர்கள் பெரும் அவதி

(நெளுக்குளம்)

வவுனியாவில் இ.போ.ச. பேருந்தின் சேவைகள் உள்ளூர் சேவைகள் நேர காலத்தில் முறையாகவும் சரியாகவும் இடம்பெறாததால் பாடசாலை மாணவர்கள் உரிய நேரத்திற்கு பாடசாலைக்கு செல்ல முடியவில்லை, பணம் கொடுத்து பெற்றுக் கொள்ளப்பட்ட பருவகால பயணச்சீட்டுக்கள் பலனளிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

வவுனியா இ.போ.ச.பேருந்து சாலையிலுள்ள பேருந்துகள் அதிகளவில் வெளி மாவட்டங்களை நோக்கிச் செல்கின்றன. வவுனியாவிலுள்ள கிராமப்புறங்களுக்கு உரிய நேரத்திலும் முறையாகவும் சேவைகள் இடம்பெறுவதில்லை.

இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் நீண்டநேரம் காத்திருப்பதுடன் பாடசாலை ஆரம்பமாகிய பின்னரே பாடசாலைக்கு செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது.

அத்துடன் கிராமங்களிலிருந்து நகர்ப்புறங்களிலுள்ள வியாபார வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் இளைஞர்கள், யுவதிகள் பேருந்து சேவை உரிய நேரத்தில் இடம்பெறாமையினால் நேரகாலத்திற்கு வீடுகளுக்கு செல்ல முடியவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

வவுனியா இ.போ.ச. சாலையினால் வவுனியாவிலுள்ள மக்கள் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் மாணவர்கள் உட்பட பலர் நிர்க்கதி நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான நிலைமைகளை அகற்றி பொதுமக்கள், இளைஞர்கள், யுவதிகள், பாடசாலை மாணவர்களுக்கான பாதுகாப்பான சேவைகளையும் தன்னிறைவான சேவைகளையும் வழங்க வவுனியா இ.போ.ச.சாலை முன்வரவேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் குறித்து வவுனியா இ.போ.ச.சாலையின் முகாமையாளர் எச்.சாஹிருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது; வவுனியா சாலைக்கு 15 பேருந்து சாரதிகளும் நடத்துநர்களும் தேவைப்படுகின்றனர்.

இவ்வாறான ஆளணிப்பற்றாக்குறை காரணமாக கிராமப்புறங்களுக்கான சேவைகள் மேற்கொள்ள முடியவில்லை. போதியளவு பேருந்துகள் சாலையில் காணப்படுகின்ற போதிலும் ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவர் தர்மபால, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.காதர் மஸ்தான், றிசாத் பதியுதீன் மற்றும் இ.போ.ச. போக்குவரத்துச் சபைப் பணிப்பாளர் ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவித்தார். (9-299)

# உரிய காலத்துக்கு முன்னர் கால்நடைகளை கட்டாக்காலிகளாக விடும் பண்ணையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

(பூநகரி)

கமநல சேவை நிலைய தீர்மானத்தினையும் மீறி தமது கால்நடைகளை சில பண்ணையாளர்கள் கட்டாக்கலிகளாக விட்டுள்ளதால் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாகவும் அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் பூநகரி விவசாயிகள் உரிய அதிகாரிகளிடமும் கமக்கார அமைப்புகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.


பூநகரி கமநல சேவை நிலைய எல்லைப்பிரிவின் கால போக விதைப்பாக 12 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட ஏக்கர் காணியில் நெற்செய்கை பண்ணப்பட்டது. வெட்டு இயந்திரத் தட்டுப்பாடு காரணமாக இன்னும் நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல் வயல்கள் வெட்டப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இந்த நிலையில் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை உரிய காலத்திற்கு முன்னதாகவே கட்டாக்காலியாக விட்டிருப்பதால் விவசாயிகள் பெருங்கவலை அடைந்துள்ளதுடன் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கமக்கார அமைப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கமநல சேவை நிலைய தீர்மானத்தின் படி மார்ச் 15 ஆம் திகதிக்குப் பின்பே கட்டாக்காலியாக கால்நடைகளை விட முடியும்.

ஆனால் குறித்த தீர்மானத்தை மீறி தமது கால்நடைகளை கட்டாக்காலியாக விடுபவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கமக்கார அமைப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன் இவ்விடயம் தொடர்பாக கமநல ஆணையாளரையும் சந்திக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (9-84)

## வாழ்வாதார உதவி வழங்கல்




(முறிகண்டி)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான வாழ்வாதாரம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி பச்சிலைப்பள்ளியில் இடம்பெற்றது. பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு தலா ஒரு இலட்சம் பெறுமதியான வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்தார். விசேட நிதியில் வழங்கப்பட்ட குறித்த வாழ்வாதார உதவிகள் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 6 பேருக்கு வழங்கி வைக்கப்பட்டன. (9-100-312-316)

# பாரதம்

# மீண்டும் டில்லி முதல்வராக கெஜ்ரிவால்!



## மூன்றாவது முறையாகவும் ஆம் ஆத்மி ஆட்சி

(டில்லி)

டில்லியில் ஆம் ஆத்மி கட்சி மீண்டும் ஆட்சியைப் பிடித்துள்ள நிலையில்,நாளை 14ஆம் திகதி கேஜ்ரிவால் முதல்வராக பதவியேற்பார் என தெரிகிறது.

டில்லி சட்டசபைத் தேர்தலில் அரவிந்த் கேஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி 62 தொகுதிகளில் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக ஆட்சியை பிடித்தது. பாஜக 8 தொகுதிகளில் வெற்றி பெற்றது. டில்லியில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சியில் இருந்த காங்கிரஸ் இரண்டாவது முறையாக ஒரு ஆசனம்கூட பெறவில்லை.

நாளை 14 ஆம் திகதி கேஜ்ரிவால் பதவியேற்பு விழா நடைபெறும். கடந்த 2015ஆம் ஆண்டு தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி 67 தொகுதிகளில் வெற்றி பெற்றபோதும், கேஜ்ரிவால் பெப்ரவரி 14 ஆம் திகதி பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# தேர்தல் கொண்டாட்டத்தில் வன்முறை ஆம் ஆத்மி கட்சியின் தொண்டர் பலி!

(சென்னை)

டில்லி சட்டசபை தேர்தல் வெற்றி கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆம் ஆத்மி கட்சியின் சட்டமன்ற உறுப்பினரின் வாகனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கட்சி தொண்டர் ஒருவர் கொல்லப்பட்டார்.

தேர்தலின் பின்னர் ஆலய வழிபாட்டை முடித்துக்கொண்டு திரும்பிக்கொண்டிருந்த புதிதாக தெரிவு செய்யப்பட்ட நரேஸ் யாதவ் என்ற சட்டமன்ற உறுப்பினரின் காரின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது கட்சித் தொண்டர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார், மற்றொரு நபர் காயமடைந்தார். சட்டமன்ற உறுப்பினர் காயங்கள் எதுவுமின்றி உயிர் தப்பினார்.

இதன்போது மூவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என தெரிவித்துள்ள பொலிஸார் ஒருவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவித்தனர்.



டில்லி சட்டசபைக்கான தேர்தலில் ஆம்ஆத்மி கட்சி மீண்டும் வெற்றிபெற்றுள்ளது.

டில்லி சட்டசபை தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில் அரவிந் கேஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி 70 ஆசனங்களில் 62 ஆசனங்களை கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளது.

பாரதிய ஜனதா 8 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சி முற்றாக தோற்கடிக்கப்பட்டது. (ஜ-2)

# ஏழு தமிழர்கள் விடுதலை தொடர்பான தமிழக ஆளுநரின் நிலைப்பாடு என்ன?

## இரு வாரத்துக்குள் விளக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

பேரறிவாளன் உட்பட 7 தமிழர்களின் விடுதலை தொடர்பான அமைச்சரவை தீர்மான கோப்பின் நிலை என்ன என்பது தொடர்பாக 2 வாரத்துக்குள் ஆளுநரிடம் கேட்டுத் தெரிவிக்க தமிழக அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் உள்ள பேரறிவாளன் தன் தண்டனையை நிறுத்தி வைக்கக்கோரி தாக்கல் செய்த மனு உச்சநீதிமன்றத்தில் நீதிபதி நாகேஸ்வர ராவ் தலைமையிலான அமர்வின் முன் விசாரணைக்கு வந்தது.

ஏற்கனவே கடந்த முறை உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டும் சி.பி.ஐ. தரப்பில் உரிய புதிய நிலவர அறிக்கை தாக்கல் செய்யாத்தால், பேரறிவாளன் உட்பட 7 பேரின் விடுதலை விவகாரத்தில் தமிழக அரசு சட்டபூர்வமாக எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும், தீர்மானங்கள் குறித்தும் அதன் நிலை குறித்தும் நீதிமன்றத்தில் தெரிவிக்க உத்தரவிடப்பட்டது.

தமிழக அரசு தரப்பு ஆஜரான மேலதிக தலைமை சட்டத்தரணி பாலாஜி தெரிவிக்கையில், "ஏழு பேர் விடுதலை தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறை வேற்றி ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. அதன் மீது முடிவெடுக்கப்படாமல் உள்ளது. மேலும் ஆளுநருக்கு அரசு அழுத்தம் கொடுக்க முடியாது" என மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# விண்வெளிக்கு வானொலி அ

(வோஷிங்டன்)

விண்வெளிக்கு அப்பால் இருந்து மர்மமான வானொலி அலை வரிசைகள் வருவதை ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

எப்.ஆர்.பி எனப்படும் அதிவேக வானொலி அலைவரிசைகள் ஆற்றல் மிக்கதாக வருவதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இத்தகைய வானொலி அலை வரிசைகள் 50 கோடி ஒளி ஆண்டு தொலைவில் இருந்து வருவதாக





## யுத்தக்குற்றச்சாட்டுக்கள் விவகாரம்

# முன்னாள் சூடான் ஜனாதிபதியை நீதிமன்றில் நிறுத்த அரசு இணக்கம்

(டார்பூர்)

யுத்தக்குற்றச்சாட்டுகளிற்குள்ளாகியுள்ள முன்னாள் சூடான் ஜனாதிபதி ஓமார் அல் பசீரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் ஒப்படைப்பதற்கு சூடான் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சூடான் அரசாங்கத்திற்கும் கிளர்ச்சிக்குழுக்களிற்கும் தலைநகர் டார்பூரில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போதே இது குறித்த இணக்கப்பாடு எட்டப்






## வெளிநாடு

# கொரோனா கோரத்தாண்டவம்!

# உயிரிழப்பு 1,115 ஆக உயர்வு






(பீஜிங்)


**கொரோனா வைரஸின் தாக்கம் காரணமாக உயிரிழந்தோர் தொகையானது ஆயிரத்து 115 ஆக பதிவாகியுள்ளதுடன், பாதிக்கப்பட்டோர் தொகையும் 45 ஆயிரத்து 171 ஆக உயர்வடைந்தது.**

அத்துடன் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் 8 ஆயிரத்து 216 பேர் ஆபத்தான நிலையில் உள்ளதுடன், 4 ஆயிரத்து 794 பேர் குணமடைந்தும் உள்ளனர்.

கொரோனா வைரஸ் உலகிற்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. 'சீனாவில்கொரோனா வைரஸ் பாதிப்பினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

சீனாவில் தற்போது அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பிற நாடுகளுக்கும் கடுமையான அச்சுறுத்தலைக் கொடுத்துள்ளது. (ஜ-2)

## ...க்கு அப்பால் மர்மமான ...பி அலைவரிசைகள்




வும் விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டினர்.

முன்னதாக கடந்த 2018 செப்டெம்பர் மற்றும் 2019 ஒக்டோபர் மாதங்களில் கனடாவில் செயற்பட்டு வரும் விண்வெளி ஆய்வு மையம் ஒவ்வொரு 16 நாட்களுக்கு ஒரு முறை இதுபோன்ற அதிவேக வானொலி அலைவரிசைகள் வருவதையும் கண்டறிந்தனர்.

இந்நிலையில் விண்வெளியில் இருந்து புதிதாக 8 ரேடியோ சிக்னல்கள் வருவதையும் ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர்.

இத்தகைய அலைவரிசைகள் எங்கிருந்து வருகின்றன என்பது குறித்தும் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். (ஜ-2)



பட்டது.

இதன் காரணமாக முன்னாள் ஜனாதிபதி ஓமார் அல் பசீர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும் நிலை உருவாகியுள்ளது.


2003 இல் சூடானில் வெடித்த மோதலின் போது யுத்தக் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளில் ஈடுபட்டார் என முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

காயங்களை ஆற்ற முடியாவிட்டால் நீதியை நிலைநாட்ட முடியாது என அரசாங்க பேச்சாளர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

யுத்த குற்றங்களிற்காக பிடியாணை பிறப்பிக்கப்பட்ட அனைவரும் சர்வதேச நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜராக வேண்டும் என நாங்கள் இணங்கியுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஓமார் அல் பசீர் 1989 இல் சதிப்புரட்சியின் மூலம் ஆட்சியை கைப்பற்றிய பின்னர் கடந்த வருடம் வரை சூடானை இரும்புக்கரத்துடன் ஆட்சி புரிந்தார். கடந்த வருடம் ஏப்ரல் மாதம் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## கொரோனா வைரஸ் எதிரொலி முக்கிய அதிகாரிகள் பணிநீக்கம்



(பீஜிங்)

சீனாவில் முக்கிய அதிகாரிகள் சிலர் பணி நீக்கம் செய்யப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த கையாண்ட விதம் குறித்த குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய அதிகாரிகளே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

ஹூபேய் சுகாதார ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் குறித்த ஆண்ணக்குழுவிற்கான கட்சியின் செயலாளர் ஆகியோரும் பதவி நீக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரினதும் பதவி வெற்றிடத்திற்கு, தேசிய பிரமுகர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் உள்ளூர் செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிப் பணிப்பாளரும் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தையும் தாண்டியுள்ள நிலையில், சீனா இந்த நடவடிக்கையினை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# வாக்குறுதிகளை நிறைவேற்றினால் அரசுக்கு ஐ.தே.க.ஆதரவு வழங்கும்

## அஜித் மன்னப்பெரும கூறுகிறார்

(கொழும்பு)

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமானால் அதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்க ஐ.தே. கட்சி தயாராகவே உள்ளதென அக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தெரிவித்தார்.



ஐ.தே.க.தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் தேர்தலுக்கு முன்னரும் தேர்தலுக்குப் பின்னரும் நாட்டு மக்களுக்குப் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. எனினும் அவற்றை நிறைவேற்ற முன்வரவில்லை.

ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளித்துள்ள போதும் அது இடம்பெறவில்லை. அதனால் தினமும் பட்டதாரிகளும் ஆசிரியர்களும் கொழும்பில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது தொடர்கிறது.

தேர்தலுக்கு முன்னர் நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலை என்ன? என்று மக்களிடம் கேள்வி கேட்டே ஆதரவைப் பெற்றனர். இன்று நிலைமை என்ன? வெங்காயம், மரக்கறி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தலைக்கு மேல் ஏறியுள்ளன. அந்த வகையில் அரசாங்கம் மக்களை ஏமாற்றியுள்ளதாகவே கருத முடிகிறது.

உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைந்துள்ள போதும் அதன் பிரதிபலன்கள் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. ஆனால் மக்களுக்குத் தெரியாமலே சில பகுதிகளில் மின்சாரம் மற்றும் நீர்வெட்டு இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்ட பிரதமர், அரசாங்கம் பெற்றுக் கொண்ட கடனை மீளச் செலுத்துவதில் கால அவகாசத்தைக் கோரியுள்ளார். அதற்காக இந்தியா சென்ற அவர், 68 பேரை அழைத்துச் சென்றார். அவர்களுக்கான செலவு மிகவும் அதிகமானது.

கடனை மீளச் செலுத்துவதற்கு கால அவகாசம் கேட்கச் செல்வது இவ்வாறுதானா? என நாம் அரசாங்கத்தைக் கேட்க விரும்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மக்களின் தெரிவுகளில் முன்னுரிமை அளிக்கப்படாத மத்திய அரசின் திட்டங்கள் சபையால் நிராகரிப்பு

(கொழும்பு)

மக்களின் தெரிவுகளில் முன்னுரிமை அளிக்கப்படாத மத்திய அரசின் திட்டங்களை வலி.கிழக்குப் பிரதேச சபை நிராகரித்தது.

மத்திய அரசாங்கத்தின் நிறைவான கிராம அபிவிருத்தித் திட்டத்தில் மக்களால் முன்னுரிமை அளிக்கப்பட்டதன் அடிப்படையில் வீதிகள் தெரிவு செய்யப்படாமல் மக்கள் முன்னுரிமைக்குப் புறம்பாக இடம்பெற்ற வீதிகளின் பட்டியல்களை நிராகரிப்பது என வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தீர்மானம் எடுத்துள்ளது.

நிறைவான கிராமம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் இடம்பெறவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கான விபரங்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளருக்கு கடந்த 3 ஆம் திகதி பிரதேச செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் உப தவிசாளர் உள்ளிட்ட 15 உறுப்பினர்கள் வலிகாமம் கிழக்கில் மேற்கொள்ளப்படவுள்ள மேற்படி திட்டத்திற்கு சபை அங்கீகாரம் வழங்க முடியாது எனத் தெரிவித்து விசேட கூட்டத்தினைக் கூட்டுமாறு தவிசாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் சபையின் மூன்றிலொரு பங்கிற்கு மேற்பட்ட உறுப்பினர்களால் இக் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் கடந்த திங்கட்கிழமை சபை கூடியது.

இக் கூட்டத்தில் தலைமை உரையாற்றிய தவிசாளர், நிறைவான கிராமம் அபிவிருத்தித் திட்டத்தில் மக்களால் முன்வைக்கப்பட்ட முன்னுரிமைப்பட்டியல் நிராகரிக்கப்பட்டிருப்பின் அது கண்டிக்கத்தக்கது. எனினும் தற்போது இத் திட்டத்தில் கிடைத்துள்ள வீதி விபரங்களை சர்ச்சைக்கு உட்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன. இப் பட்டியல்கள் அரச நிர்வாக ரீதியில் இறுதிப் படுத்தப்பட்ட பட்டியல்கள் ஆகும். மாவட்ட அபிவிருத்திக் குழுவிலும் அனுமதி பெறப்பட்டுள்ளது. இதேவேளை விரைவில் பாராளுமன்றத் தேர்தல்கள் இடம்பெறவுள்ள நிலையில் இப் பணம் திரும்பிச் செல்லும் துர்ப்பாக்கியம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தலைமையுரையைத் தொடர்ந்து விசேட கூட்டத்தில் உறுப்பினர்களின் விவாதத்திற்கு தவிசாளரால் இடமளிக்கப்பட்டது. இதில் பிரசன்னமாகியிருந்த உறுப்பினர்கள் கிடைக்கப்பெற்ற அபிவிருத்தித் திட்ட நிரலில் மக்களின் பங்கேற்புடனான அபிவிருத்தித் தெரிவுகளுக்கு புறம்பாக வீதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், அவ்வாறான குறைபாடுகள் உடைய திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு சபை அனுமதிக்காது என வாதிட்டனர்.

சபையில் பிரசன்னமாகியிருந்த உறுப்பினர்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தவிர்ந்த ஏனைய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள், திட்டங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட திட்டங்கள் தவிர்ந்த ஏனைய திட்டங்களை முன்னெடுக்க அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்தனர். நிறைவான கிராமம் அபிவிருத்தித் திட்டத்திற்கு பிரதேச செயலகமே மக்கள் பங்கேற்புக்கூட்டம்,அது தொடர்பான நிரல்படுத்தல்களை மேற்கொண்டமையால் பிரதேச செயலகத்திடம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட திட்டங்களின் அட்டவணையைக் கோரி அதில் முன்னுரிமைக்குரியதாக உள்ளடக்கப்பட்டுள்ள திட்டங்களை மட்டுமே வீதிகளில் நிறைவேற்ற முடியும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தவிர்ந்த உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இவ் விடயத்தில் இவ் இழுபறி நிலைமைகளின் காரணமாக கிடைக்கப்பெற்ற நிதி திரும்பிச் செல்லுமாகக் காணப்படின் அதற்கு இவ் அவையே முழுமையான பொறுப்புடையது என தவிசாளரால் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கு சபையில் சுதந்திரக்கட்சி மற்றும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஒரு உறுப்பினர் தவிர்ந்த ஏனையோர் நிதி திரும்புதல் விடயத்தில் சபை முழுப்பொறுப்புடையது எனத் தெரிவித்தனர். இந்நிலையில் நிறைவான கிராமம் அபிவிருத்தித் திட்டத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை பிரதேச செயலாளரிடம் கோரி அதில் கிடைக்கப்பெற்ற அட்டவணையில் காணப்படும் வீதிகளை முன்னெடுப்பதற்கு சபையில் முடிவு எட்டப்பட்டது.

இதன் பிரகாரம் நிறைவான கிராமம் அபிவிருத்தியில் கிடைக்கப்பெற்ற 49 வீதிகளில் 18 வீதிகள் வரையிலேயே முன்னெடுக்கப்படும் சாத்தியமுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-350)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பயமும் பாதுகாப்பும்!

ஒருத்தருடன் நாம் சண்டை போடுகின்றோம்...அதிலே நாமே வென்று விடுகின்றோம் என்று வைத்துக் கொள்ளுங்களேன். நம்ம மனதிற்கு சந்தோசமாகத்தான் இருக்கின்றது. இருந்தாலும் உள் மனதிலே ஒரு பயமும் உண்டாகலாம். தோற்றுப் போனவன் சும்மா இருப்பானா? 'அவன் மறுபடியும் எப்போது சந்தர்ப்பம் வரும்...?' என்று எதிர்பார்த்துக் கொண்டுதானே இருப்பான்! அதனாலே வெற்றியின் ஒரு பக்கம் சந்தோசமாக இருந்தாலும் இன்னொரு பக்கம் பயமாகத்தான் இருக்கும்!

ஒரு மன்னன் இருந்தான். நிறையப் பேரோடு அவன் சண்டை போட்டான். வென்றான்! பல நாடுகளை வென்றான். அதனாலே அவன் மனதிற்குள்ளே ஒரு பயம் உண்டாகிற்று! பகை மன்னர்களெல்லாம் படையெடுத்துக் கொண்டு வந்துவிட்டால் என்ன செய்வது? என்ற பயமே.

எல்லோரும் வந்து இப்போது இருக்கின்ற இந்த மாளிகைகளை கைப்பற்றிவிட்டால் என்ன செய்வது என்று யோசித்தான். நடுங்க ஆரம்பித்தான். 'ஏன் ஒரு மாதிரியாக இருக்கின்றீர்கள்?' என்று கேட்டார் அமைச்சர். இவன் விபரத்தை சொன்னான். இரண்டு பேருமாக சேர்ந்து ஒரு திட்டம் போட்டார்கள். அதன் பிரகாரம் ஒரு பெரிய மாளிகை ஒன்றை புதிதாக கட்டினார்கள். அதற்கு ஜன்னல்கள் எதுவும் கிடையாது. உள்ளே போக, வெளியே வர ஒரே ஒரு கதவு மட்டும் தான் உண்டு! அதைத் தவிர அந்த மாளிகைக்கு வேறு எந்த வழியும் கிடையாது! ஒரு சின்னத் துவாரம் தெரிந்தால் கூட அதையும் முழுவதுமாக அடைத்து விட்டான். ஒரே ஒரு கதவு வைத்தானே... அந்த வழியைப் பாதுகாப்பதற்கும் ஏராளமான வீரர்களை காவலுக்கு நிறுத்தி வைத்தான். இவ்வளவும் செய்து முடித்ததன் பின்னர் தான் அந்த மன்னனுக்கு மனசு திருப்தியாக இருந்தது.

ஒருநாள் அந்த ராஜாவும் அமைச்சரும் அந்த ஒரு கதவு வழியாக... வெளியே வந்தார்கள்! என்ன அமைச்சரே? எப்படி நம்ம ஏற்பாடு?" என்று அட்டகாசமாக சிரித்துக் கொண்டே கேட்டார் ராஜா. "அபாரம்!" என்றார் அமைச்சர். அவர் வேறு என்ன சொல்வார்? இவர்கள் இரண்டு பேரும் இவ்வாறு பேசியதை அங்கே வீதியோரமாக உட்கார்ந்திருந்த ஒரு பெரியவர் கேட்டார். சிரித்துக் கொண்டார். அவர் சிரித்ததைப் பார்த்ததும் மன்னனுக்குக் கோபம் வந்துவிட்டது!

"ஏனப்பா... சிரிக்கின்றாய்?" என்று கேட்டார். அதற்கு அந்தப் பெரியவர் சொன்னார்... ரொம்ப புத்திசாலித்தனமாகத்தான் இந்த மாளிகையை கட்டியிருக்கின்றீர்கள்! மிகவும் பாதுகாப்பாகத்தான் இருக்கின்றது! இருந்தாலும் ஒரு குறை தெரிகின்றது!" என்றார். என்ன? என்று கேட்டார். வேறு வழியே வைக்காமல் மாளிகை கட்டிய நீங்கள்...எதற்காக ஒரே ஒரு வழி மட்டும் வைத்துள்ளீர்கள்? அந்த வழியாக "எதிரிகள் நுழைந்துவிட்டால் என்ன செய்வீர்கள்?" என்றார்!

"என்ன செய்வது?" என்றார். அதையும் ஒரு கருங்கல் சுவர் எழுப்பி அடைத்துவிடுங்க! அதுதான் நல்லது. அதன் பின்பு "எதிரிகள் பயம் கொஞ்சம் கூட இல்லாமல் நீங்கள் உள்ளே உட்கார்ந்திருக்கலாம். அதுதான் மிகவும் பத்திரம்!" என்றார். மன்னன் யோசித்தான். 'பளிச்' என்று ஒரு யோசனை தோன்றியது.

அதுசரி... "நீ சொல்வது மாதிரி அந்த ஒரு வழியையும் அடைத்து விட்டால் இந்த மாளிகை கல்லறை போல ஆகிவிடுமே!" என்றார். இப்போது மட்டும் இது எப்படி இருக்கின்றது? கல்லறை போன்று தானே இருக்கின்றது! என்றார் பெரியவர். அதற்குப் பின்னர் கொஞ்சம் விளக்கமும் கொடுத்தார். "உங்கள் மாளிகையிலே எவ்வளவு ஜன்னல்களும் கதவுகளும் இருக்கின்றதோ... அந்த அளவிற்கு வெளியுலகத்தோடு உங்களுக்கு தொடர்பு இருக்கிறது! அந்தளவிற்கு உங்கள் வாழ்க்கையிலே ஓர் இயக்கம் இருக்கு! கதவை மூடமூட வாழ்க்கையும் அடைபட்டுப் போகிறது!"

"நான் கூட ஒரு காலத்திலே மாளிகையிலேதான் இருந்தேன். அத்துடன் சுவர்களை எவ்வளவுதான் தள்ளிப் போட்டாலும் என் வாழ்க்கைக்கு அவைகள் எல்லைக் கோடுகளாக இருப்பதை உணர்ந்தேன். வாழ்விற்கு எல்லையே இருக்கக்கூடாது என்று நினைத்தேன். இப்படி வந்துவிட்டேன்! இப்ப என் வாழ்விற்கு வானம் தான் கூரை! இந்த நிலம் தான் என் மாளிகை. இப்பொழுது தான் வாழ்க்கையை முழுமையாக என்னாலே உணர முடிகின்றது!" அனுபவிக்க முடிகிறது என்றார் அந்தப் பெரியவர்.

அந்த அரசர் ஒரு பெரிய தத்துவத்தை புரிந்துகொண்டார். தன்னுடைய மாளிகைக்கு நிறைய ஜன்னல்களையும் கதவுகளையும் வைக்கச் சொல்லி உத்தரவு போட்டார்!

ஒரு சுடுகாட்டிலே, ஒரு கல்லறைக்கு மேலே கால் மேல் கால் போட்டுக்கொண்டு உட்காத்திருந்தான் ஒருத்தன். அந்த வழியாகப் போன ஒருத்தர் அவனைப் பார்த்துக் கேட்டார்.

"ஏனப்பா இப்படி பேய் பிசாசு நடமாடுகிற இந்த மயானத்துக்கு வந்து கல்லறைக்கு மேலே உட்கார்ந்திருக்கிறாய்?" என்றார். "எவ்வளவு காலம் தானுங்க உள்ளேயே இருக்கிறது... ஒரே புழுக்கமா இருந்தது... அதுதான் காற்று வாங்கலாம் என்று வெளியே வந்தேன்!" என்றார் அந்த நபர்!

# அடுத்த 25 வருடங்களுக்கு ஐ.தே.க. ஆட்சியமைக்க முடியாது

## நிமால் திட்டவட்டம்



(கொழும்பு)

**அடுத்த 25 வருடங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியால் ஆட்சிக்கு வர முடியாத நிலை காணப்படுவதாக நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**

ஊவா பரணகம பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் பிரச்சினையே காரணம் எனச்சாடினரார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனாதிபதி தேர்தலின் போது பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் செயற்பட்டுவந்தன. என்றாலும் அனைத்து சக்திகளுக்கும் எதிராக மக்கள் செயற்பட்டு கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்ய நடவடிக்கை எடுத்தனர்.

வடக்கு-கிழக்கில் எங்களுக்கு வாக்குகள் இல்லாமற் போகும் போது தெற்கு மக்கள் நாட்டுக்காக கட்சி பேதமின்றி சிறந்த தீர்மானம் ஒன்றை எடுத்தனர். நாடு சென்றுகொண்டிருந்த போக்கை மாற்றியமைக்க வேண்டும் என்ற தேவை மக்களுக்கு இருந்தது.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியால் ஏற்பட்ட தவறுகளை இன்று அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்மானங்களை அவர்கள் அன்று எடுக்கவில்லை. மகள் விரக்தியடைக்கூடிய தவறான தீர்மானங்களையே எடுத்தார்கள் என்பதை தற்போது அவர்கள் உணர்கின்றனர்.

நாட்டு வளங்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்தார்கள். அதனால் மக்களின் எதிர்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டது. மேலும் பாரிய கடன் சுமையுடனே அரசாங்கத்தை பெற்றுக்கொண்டிருக்கின்றோம் என்றாலும் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் செயற்படுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்" என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தார். (ஐ)

# குற்றச்சாட்டுக்களுக்கு றிசாத் முற்றாக மறுப்பு விமலிடமிருந்து 100 கோடி நட்டஈடு கோரல்

(கொழும்பு)

அமைச்சர் விமல் வீரவன்ச தன் மீது சுமத்திய பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தனது சட்டத்தரணி ஊடாக 100 கோடி ரூபாய் நட்டஈடு கோரி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

இரண்டு வாரங்களுக்குள் விமல் வீரவன்ச அதனைக் கவனத்திலெடுத்து மன்னிப்புக் கோரா விடின் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் றிசாத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, விமல் வீரவன்சவின் குற்றச்சாட்டுக்களை அவர் முற்றாக மறுத்ததுடன் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னர், அவர் தொடர்ச்சியாக பல குற்றச்சாட்டுக்களை சுமத்தி இருந்ததாகவும், பாராளுமன்ற தெரிவுக்குழு சாட்சியங்களில் அவற்றுக்கான தெளிவுபடுத்தலை வழங்கி இருந்ததாகவும் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

"அமெரிக்காவிலோ வேறு எந்த நாட்டிலோ தனக்கு எந்த வங்கிக் கணக்கும் இல்லையெனவும், 52 நாள் அரசாங்கத்தில் அமெரிக்க வங்கிக் கணக்கொன்றில் தனது பெயரில் ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் வைப்பிலிடப்பட்டதாகவும் 200 இற்கும் மேற்பட்ட காணி உறுதிப் பத்திரங்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் விமல் குற்றம் சாட்டியுள்ளார். இதை அவர் நிரூபிக்க வேண்டுமெனவும் விமல் வீரவன்சவுக்கு றிசாத் சவால் விடுத்துள்ளார். வெறுமனே தேர்தல் வெற்றிக்காக பேசிக்கொண்டிருக்காமல், இந்தக் குற்றச்சாட்டுக்களை ஒப்புவிக்க வேண்டும்.

அத்துடன், சதொச நிறுவனத்துக்கான மின்பிறப்பாக்கி கொள்வனவில் பாரிய ஊழல் நடந்திருப்பதாக இன்னுமொரு குற்றச்சாட்டையும் முன்வைத்துள்ளார். இதுவும் அப்பட்டமான பொய்யாகும்.

எனவே, விமல் வீரவன்சவின் அத்தனை குற்றச்சாட்டுக்களையும் முற்றாக மறுப்பதுடன், அரசியலுக்காக பொய்யான பிரச்சாரங்களை இனிமேலும் கட்டவிழ்த்து விடுவதை அவர் உடன் கைவிட வேண்டுமெனக் கோருகின்றேன்.



வில்பத்து தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு உண்மைத்தன்மையை வெளிப்படுத்தும் வகையில், விசாரணைக் குழுவொன்றை நியமிக்குமாறும் சுமார் 2 மாதங்களுக்கு முன்னதாக கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தேன் என்றும் றிசாத் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ் திணைக்களத்தில் தமிழ்மொழி அறிவுள்ளோருக்கு பாரிய வெற்றிடம்

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுட்டிக்காட்டு

(ஏறாவூர்)

இலங்கையில் பொலிஸ் திணைக்களம் உட்பட பாதுகாப்புப் பிரிவுகளில் தமிழ்மொழி அறிவுள்ளவர்களின் தேவை அதிகரித்த நிலையில் உள்ளதாக இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன குணரெட்ன தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கடந்த காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கல்வியில் கொடிகட்டிப் பறந்தன. தற்போது அந்த நிலை மாறி யுள்ளது. இந்த நாடு சுதந்திரம் அடைந்தபோது இந்த நாட்டில் பூச்சியம் ரீதியான கடனே இருந்தது. அன்று சிங்கப்பூர் ஜனாதிபதி இலங்கைக்கு வந்து சென்ற போது நான் இலங்கை போன்று சிங்கப்பூரை மாற்றுவேன் என்று



குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் இன்று சிங்கப்பூர் எங்கு உள்ளது? நாங்கள் எங்கு இருக்கின்றோம். சிறந்த ஒழுக்கமிக்க சமூகத்தினை சிங்கப்பூர் கட்டியெழுப்பியதன் காரணமாகவே அந்த வளர்ச்சியேற்பட்டது.

ஒழுக்கம் கட்டியெழுப்பப்படும் போது வீட்டில் சிறந்த நிலை உருவாகும். ஒழுக்கம் இருக்கும் போது அந்த நாடு வெற்றிபெற்ற நாடாக மாறும். அதற்கான முயற்சிகளையே இன்று நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். கடற்படையின் (மாணவர் சிப்பாய் படையணி) மூலம் மாணவர்கள் மத்தியில் சிறந்த தலைமைத்துவமும் ஒழுக்கமிக்க நாடும் கட்டியெழுப்பப்படும் என நான் நம்புகின்றேன். இந்த படையணியில் மாணவர்கள் இணைந்து பணியாற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் தொழில் வாய்ப்பு ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும்.

இன்று பொலிஸ் திணைக்களத்திலும் முப்படையிலும் தமிழ்மொழி தெரிந்த அதிகாரிகளுக்கான பாரிய வெற்றிடங்கள் உள்ளன.

தமிழ் இளைஞர், யுவதிகள் இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு முன்வர வேண்டும். தமிழ் மொழி பேசுவோரை உள்ளீர்ப்பதற்கு முப்படையினரும் பொலிஸாரும் கதவுகளை திறந்து வைத்துள்ளனர். அதனை பயன்படுத்தவேண்டும். அதன் மூலம் சிறந்த ஒரு நாட்டினை கட்டியெழுப்பமுடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மருந்து அருந்திய குழந்தை மரணம்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட நல்லூர், தோப்பூர் பிரதேசத்தில் சளிக்கு மருந்து எடுத்த நிலையில் குழந்தை உயிரிழந்ததாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பிறந்து 26 நாட்களே ஆன ஆண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

கடந்த 10 ஆம் திகதி காலை சளி காரணமாக தோப்பூர் பிரதேச வைத்தியசாலைக்கு தாய் அன்டன் நிலோஜியினால், பிறந்து 26 நாட்களான தனுஜன் அழைத்துச் செல்லப்பட்டார்.

இதன்போது, வைத்தியரால் குழந்தை பரிசோதிக்கப்பட்டு ஆவி பிடிக்கப்பட்ட நிலையில் பாணி மருந்து வழங்கப்பட்டதனை அடுத்து அதனை இரவிற்கும் வழங்குமாறு வைத்தியர் அறிவுறுத்தியதன் பின்னர் தனுஜன் வீட்டுக்கு அழைத்து வரப்பட்டார்.

வீடு வந்த குழந்தை மூச்சற்ற நிலையில் உள்ளதை அவதானித்த தாய் குழந்தையை தோப்பூர் பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றார்.

இதன்போது, குழந்தையை பரிசோதித்த வைத்தியர் குழந்தை உயிரிழந்து விட்டதாக குழந்தையின் தாயாரிடம் தெரிவித்தார்.

மரணமடைந்த குழந்தையின் சடலமானது பிரேத பரிசோதனைக்காக சம்பூர் பொலிஸாரினால் எடுத்துச் செல்லப்பட்டு திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 150 | 140 |
| உருளைக்கிழங்கு | 130 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 200 | 180 | 200 |
| தக்காளி | 250 | 200 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 90 | 100 |
| கோவா | 120 | 160 | 140 | 200 |
| கரட் | 300 | 350 | 200 | 520 |
| பூசணி | 100 | 160 | 170 | 160 |
| புடோல் | 120 | 150 | 120 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 350-400 | 350 | 300 |
| பெரிய வெங்காயம் | 120 | 170 | 120 | 200 |
| பாகற்காய் | 120 | 120 | 160 | 240 |
| வெண்டிக்காய் | 200 | 140 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 80 | 120 |
| லீக்ஸ் | 250 | 280 | 330 | 400 |
| பீற்றூட் | 120 | 160 | 180 | 200 |
| கறிமிளகாய் | 200 | 220 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 500 | 800 |
| போஞ்சி | 160 | 240 | 180 | 250 |
| கத்தரிதம்புள்ள | 120 | — | 130 | 120 |
| கீரை-1பிடி | 30 | 30-40 | 30 | 30 |
| தேசிக்காய் | 40 | 50 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 40-80 | 65 | 70-90 |
| இராசவள்ளி | 200 | 160 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 180 | 300 |
| முள்ளங்கி | 60 | 80 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 30 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | — | 120 | 100 |

# சர்வதேச வானொலி தினம் இன்று



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்
தொடர்பாடல்-ஊடகவியற்கற்கை ஆசிரியர்

பாரம்பரியத் தொடர்பாடலில் இருந்து வெகுசனத் தொடர்பாடல் வளர்ச்சி கண்டபோது அதனை மேற்கொள்ளும் ஊடகங்களில் ஒன்றாக வானொலி உள்ளது. ரேடியஸ்(Radius) என்ற இலத்தீன் மொழியில் இருந்து பிறந்தது தான் பிற்காலத்தில் ரேடியோ என மருவி வந்துள்ளது என்கிறார்கள் அறிஞர்கள். உலகில் தகவல் தொடர்புகளை பரிவர்த்தனை செய்வதற்குச் சாதனங்கள் பல வந்துகொண்டே இருக்கின்றன: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி (ரி.வி), தொலைபேசிகள், திறன் தொலைபேசிகள், ஐ பாட், இன்டர்நெற் போன்றன சிலவாகும் இவற்றுள்வானொலி தான் முன்னோடியான இலத்திரனியல் ஊடகமாகும்.

முதன்முதலாக ஸ்பெயின் நாட்டினுடைய வானொலி மன்றம், 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 36ஆவது பொதுச் சபை கூட்டத்தில் நவம்பர் 3ஆம் திகதியை உலக வானொலி தினமாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தியது. ஆயினும் ஐ.நா. சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார-பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ நிறுவனம் ஐ.நா. சபையின் சர்வதேச ஒலிபரப்பு சேவை ஆரம் பிக்கப்பட்ட நாளாகிய 1946 மாசிமாதம் 13ஆம் திகதியை உலக வானொலி தினமாக கொண்டாடி வருகிறது.

சர்வதேச வானொலி கழகம் 2012 ஆண்டு உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. வானொலி ஒலிபரப்பு சேவையை கொண்டாடவும், பல நாட்டு வானொலி யாளர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும், ஒலிபரப்பு சம்பந்தமான முடிவெடுப்பவர்களை வானொலிகள் மற்றும் சமூக வானொலிகள் மூலமாக தகவல்கள் பரிமாறிக் கொள்வதனை ஊக்குவிப்பதற்கும் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தொடர்பாடல் துறையில் பாரியளவு முன்னேற்றங்கள் நாளுக்கு நாள் ஏற்பட்டு வருகின்ற போதும் அதன் மத்தியில் வானொலி ஒலிபரப்பின் மூலம் கல்வி, தகவல் வழங்கல், பொருள் கோடல் செய்தல் மற்றும் பொழுது போக்கு அம்சங்களை தொடர்ந்தும் வழங்கி மக்களை ஈர்த்து வருகின்றது. சமுதாயத்தில் ஓரங்கட்டப்பட்ட சமூகங்களுக்காக குரல் கொடுக்கவும் சமூகங்களை ஒன்றிணைத்து தொடர்பை ஏற்படுத்தும் வல்லமையையும் வானொலி கொண்டுள்ளது.

சாதாரண சமூகத்தில் அவர்களது பிரதேசத்தில் இடம்பெறும் முக்கிய பிரச்சினைகளையும் எதிரிடைப்போக்குகளையும் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்குப் பொதுமக்களுக்கு வாய்ப்பினை உருவாக்கும் வகையில் வானொலி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி வருவது வரவேற்க வேண்டியது. தலைமுறைகளினையும் கலாசாரங்களினையும் அலசி ஆராய்வதுடன் மனித இனத்தின் சொத்தான பண்பாடு, பன்முகத்தன்மையினை ஊக்குவிக்கவும், உலகத்துடன் இணைத்துக் கொள்ளவும் வானொலி முக்கிய பங்காற்றுகின்றது.

தற்காலத்தில் புதிய வானொலி அலைவரிசைகள், நவீன கையடக்கத் தொலைபேசிகள், சிறிய கணனிக் கருவிகள் இணையம் போன்றன வளர்ந்து வருவதால் வானொலி பல்வேறு பரிமாணங்களை எடுத்து வருகிறது. வானொலிச் சிற்றிலை, இடை அலை, தூர அலை, எப்.எம் அலைவரிசை மற்றும் செய்மதி அலைவரிசைகளும் தகவல்களை வழங்குவதற்கு இன்று பயன்படுத்தப்படுகின்றன. வானொலி தகவலை மக்களிடம் விரைவாக கொண்டு சேர்ப்பதில் பாரியளவு பங்காற்றி வருகிறது.

## வானொலி கண்டுபிடிப்பு

ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல், மைக்கேல் பரடே ஆகிய இரு விஞ்ஞானிகள் மின்காந்த அலைகளை, ஒலி அலைகளாக மாற்றும் கருவியை கண்டறிந்தனர். இவர்களை பின்பற்றி ஹென்றிச் ஹெர்ட்ஸ் என்பவர், மின்காந்த அலைகளை, டிரான்ஸ்மீட்டராக மாற்றினார். பின்னர் இத்தாலியைச் சேர்ந்த குக்லியெல்மோ மார்கோனி (1874-1937)வானொலியை கண்டறிந்தார்.இவர் நீண்ட தூரம் ஒலிபரப்பப்படும் வானொலியின் தந்தை என அழைக்கப்படுகிறார். இவர் கம்பியற்ற தகவல் தொடர்பு முறை மற்றும், "மார்க்கோணி விதி" ஆகியவற்றை உருவாக்கியவர். இக் கண்டுபிடிப்பிற்காக இயற்பியலுக்கான நோபல் பரிசை 1909ஆண்டு கார்ல் பெர்டினாண்ட் பிரவுன் உடன் இணைந்து பெற்றுக்கொண்டார். ஒரு தொழில் முனைவரான இவர் 1897இல் மார்க்கோணி வானொலி நிறுவனத்தின் நிறுவுநர். வானொலி மற்றும் அதனோடு தொடர்புடைய கருவிகளை உருவாக்கியவர். தகவலை புவியியல் வரையறையற்ற விதத்தில் சாதாரண எளிய மக்களையும் மிகவிரைவில் சென்றடையக்கூடிய வகையில் வானொலி வடிவமைக்கப்பட்டுள்ளது. வானொலி கற்பனைப் படைப்பாற்றலுக்காக ஒளிக் கீற்றை உருவாக்குகின்றது.



மனப்பாங்கு மாற்றத்திற்கான கதவுகளை திறந்து வைக்கின்றது. எண்ணங்கள் உண்மைக்கு சவால்விடும் போது துல்லியமான, பக்கம்சாராத, தெளிவான, நம்பகத்தன்மையான தகவல்களை வானொலி வழங்கி வருகின்றது. எந்நேரமும் எந்த விநாடியும் எந்த விசையை திருப்பினாலும் வான் அலைகளில் தவழ்ந்து வரும் இசை இன்று எங்கள் செவிகளில் கானம் பாடும். காற்றலைகளில் தவழ்ந்து வரும் வானொலியின் ஒலிபரப்பை எங்களின் செவி களுக்கு கொண்டு வந்து சேர்க்க உதவும் முக்கியமான கருவி வானொலி தான் என்றால் மிகையாகாது.

## உலகில், இலங்கையில் வானொலி சேவை

முதல் முதலாக அமெரிக்கா ஒலிபரப்பு தொடர்பான ஆராய்ச்சியில் 1916ஆம் ஆண்டில் ஈடுபட்டது. அதன் பயனாக அங்கு பொதுமக்களுக்கான ஒலிபரப்புச்சேவை 1920ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதன்பின்பு அமெரிக்காவில் பல ஒலிபரப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டன.இங்கிலாந்திலும் பரீட்சார்த்த ரீதியில் ஒலிபரப்புச் சேவை 1920ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து 1922 ஆம் ஆண்டிலிருந்து அது செயற்படத் தொடங்கியது.

வானொலிதான் இலங்கையில் இலத்திரனியல் தொடர்பாடல் துறைசார் வரலாற்றில் மிகப் புராதன ஊடகமாகும். இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி செய்தபோது அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட வானொலிச் சேவையே இலங்கையின் முதன் முதல் பயன்படுத்தப்பட்ட வானொலிச் சேவையாகும். பொறியியலாளர் பதவியை வகித்து வந்த எட்வெர்ட் ஹாபர் என்பவர் இலங்கையில் வானொலி சேவையை நிறுவியவர் என வரலாறு கூறுகின்றது. அவருடைய் உதவியோடு சிலோன் வயலர்ஸ் கழகம் 1922 ஆம் ஆண்டு கார்த்திகையில் உருவாக்கப்பட்டது. ஒலிபரப்புக்கான ஏற்பாடுகளைக் கவனித்து வந்த இந்த கழகத்தைச் சேர்ந்தவர்களால் 1923 ஆம் ஆண்டு ஆடியில் சிலோன் தொழில்சார் தகைமையற்றோர் வானொலிச் சமூகம் என்ற பெயரில் மற்றொரு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு ஒலிபரப்புக்கான சகல ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டன.

இந்த முயற்சிக்கு தொலைத் தொடர்பு திணைக்களமும் பெரிதும் உதவியிருந்தது.இந்த இரண்டு குழுக்களின் பரிந்துரையினால் 1924 ஆனிமாதம் 24 ஆம் திகதி வானொலிச் சங்கம் இலங்கையில் சட்டரீதியாக உருவாக்கப்பட்டது.

## இலங்கையில் பரீட்சார்த்த ஒலிபரப்பு

ஒலிபரப்புச் சேவையின் முதலாவது பரீட்சார்த்த ஒலிபரப்பு 1924 பெப்ரவரி 22ஆம் திகதியன்று கொழும்பிலுள்ள கிறிஸ்தவ வாலிபர் சங்கக் (YMCA) கட்டடத்திலும், இரண்டாவது பரீட்சார்த்த ஒலிபரப்பு 1924ஆம் ஆண்டு ஆனி 27ஆம் திகதியன்று இலங்கை பொறியியலாளர் சங்கத்தின் கூட்டம் ஒன்றின் போதும் மேற்கொள்ளப்பட்டது. ஆளுநர் சேர்.வில்லியம் ஹென்றியின் உரையாடல் வானொலி யில் ஒலிபரப்பப்பட்டமை அன்று முக்கியமாக கருதப்பட்டது. இங்கிலாந்து அரசினால் வழங்கப்பட்ட புதிய உபகரணங்களின் உதவியோடு பொறளை கொட்டா றோட்டில் இயங்கிவந்த மத்திய தந்திக் காரியாலயக் கட்டடத்தில் 1925 மார்கழி 16 ஆம் திகதி ஆளுநர் சேர். ஹியூகிளிப்ட் டால் இலங்கையில் உத்தியோக பூர்வமாக முதலாவது வானொலி ஒலிபரப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இதுவே முதன்முதலில் ஆசியாவில் உருவாக்கப்பட்ட வானொலிச்சேவையாக கருதப்படுகிறது. ஆரம்பத்தில் "கொழும்பு வானொலி நிலையம்" என்ற பெயரில் ஒலிபரப்புச் சேவை இயங்கிவந்தது. அக்காலத்தில் ஒலிபரப்பு செயற்பாட்டிற்கான திணைக்களமொன்று அமைக்கப்பட்டது. அது "இலங்கை வானொலி" என்ற அமைப்பில் தனது சேவையைத் தொடர்ந்தது. அதன்பின் சுதந்திர சதுக்கத்திலுள்ள புதிய கட்டடத்தில் 1950 இலிருந்து நிரந்தரமாக இயங்கத் தொடங்கியது. வானொலிக்காக அரச கூட்டுத்தாபனம் 1949 ஐப்பசி 05 இல் அரசினால் உருவாக்கப் பட்டது. இதில் முதல் இயக்குநர் பதவி வகித்தவர் ஜோன். என். செம்சன் ஆவார். இக்காலத்தில் இலங்கையின் வானொலி சேவை ரேடியோ சிலோன் என பெயர் பெற்றது. ஒலிபரப்புச் சேவை 1967 ஜனவரி 5ஆம் திகதியன்று கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டதனால் "இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்" என்ற பெயரில் இயங்கி வருகிறது.

தேசிய சேவை நிகழ்ச்சிகள் இலங்கைக் கலைஞர்களால் 1926 ஆம் ஆண்டு உருவாக்கப் பட்டது. ஆரம்பத்தில் ஆங்கில மொழியிலான நிகழ்ச்சிகளே ஒலிபரப்பப்பட்டு வந்தன. இலங்கை வானொலியில் "வர்த்தக ஒலிபரப்பு" என்ற பெயரில் ஒரு விளம்பரசேவை அறிமுகம் செய்யப்பட்டது. இச்சேவையும் ஆரம்பத்தில் ஆங்கில மொழியிலான நிகழ்ச்சிகளையே ஒலிபரப்பி வந்தது. முதல் சிங்கள நேரலை இசை நிகழ்ச்சி 1927இல் இருந்து ஒலிபரப்பப்பட்டது. தமிழ்,சிங்களம், ஆங்கிலம் ஆகியமும் மொழிகளிலும் 1950 ஆம் ஆண்டு வானொலி சேவை இடம் பெற்றது. வானொலி சேவையின் முதல் சிங்கள அறிவிப்பாளராக ரி.எம் கொலம்பகே திகழ்கின்றார். பி.எச்.அப்துல் ஹமீத் தமிழ் அறிவிப்பாளர்களில் புகழ்பெற்றவராக திகழ்கின்றார் என்பது நாம் அறிந்ததே. இலங்கை வானொலிச் சேவையானது சிறிலங்கா வானொலி சேவை என 1972 இல் பெயர் பெற்றது.

இலங்கையில் பின்வரும் சேவைகளின் கீழ் பல வானொலி ஒலிபரப்புச் சேவைகள் நடை பெறுகின்றன. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தேசிய வானொலி சேவைகள், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன பிராந்திய வானொலி சேவைகள், இலங்கை ஒலிபரப்பு கூட்டுதாபன சமூக வானொலி சேவைகள், இலங்கை ஒலிபரப்பு கூட்டுதாபன வெளிப்புற சேவைகள், இலங்கையில் உள்ள மற்ற உள்நாட்டு வானொலி சேவைகள், இலங்கையில் உள்ள ஏனைய வானொலி ஒலிபரப்புகள். இணைய வளர்ச்சியின் காரணமாக பல இணையவழியிலான சேவைகளும் இன்று இலங்கையில் பிரபலமடைந்து வருகின்றது.

பண்பலை ஊடான ஒலிபரப்புச் செயற்பாடு 1980 களின் தொடக்கத்தில் இலங்கை வானொலியால் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆரம்பத்தில் மேல் மாகாணத்தை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்ட பண்பலை ஒலிபரப்புச்சேவை, பின்னர் நாடளாவிய ரீதியில் 1990களின் இறுதியில் பரவலடைந்தது குறிப்பிடத்தக்கது. தனியார் வானொலிகளின் ஒலிபரப்புச் சேவைகளும் பல 1990களின் ஆரம்பதிலிருந்து அடுத்தடுத்து ஆரம்பமாகத் தொடங்கின. இதனை இலங்கையின் ஒலிபரப்புத் துறையில் ஒரு பரிணாம வளர்ச்சியாகவே கருதலாம்.

மார்க்கோனியின் விடா முயற்சியால்தான் நிசப்தமாக இருந்த நீலவானம் குரல் மூலமும், இசை மூலமும் பேசத் தொடங்கியது. வான் அலைகளுக்கு' உயிர் ஊட்டிய மார்க் கோனியின் கதை நமக்கு சொல்லும் உண்மை எளிதானது தான்.வீண்முயற்சி என்று தூற்றும் உலகம் வெற்றியின் பின் விடாமுயற்சி என்று போற்றும். முடிந்தவரை முயற்சிப்பதல்ல, மாறாக முடியும் வரை முயற்சிப்பதுதான் முயற்சி. தொலை நோக்கும் விடாமுயற்சியுடன் சேர்ந்த கடின உழைப்பும் இருந்தால் எதனையும் சாதிக்கலாம்.

வெறுமனவே வரலாற்றை படிப்பவர்கள் அல்லாது வரலாற்றை உருவாக்குவோம். எனவே வானலைகளில் நாமும் புரட்சிகள் செய்யமுயற்சிகள் செய்வோம்.



யாழ்.உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் அதிபர் ப.வாசுகி தலைமையில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலையின் மயக்கமருந்து நிபுணர் டாக்டர் வசுமதி தேவநேசன் கலந்து கொண்டார்.

# விமலுக்கு எதிரான வழக்கு செப்டெம்பரில் விசாரணைக்கு



(கொழும்பு)

அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிரான வழக்கு செப்டெம்பர் 7 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு வரவுள்ளது.

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுப் புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது விமல் வீரவன்சவுக்கு எதிரான வழக்கை செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி மற்றும் 9 ஆம் திகதிகளில் விசாரணைக்குட்படுத்தவுள்ளதாகவும் எனவே வழக்கு விசாரணையை அன்றைய தினம் வரை ஒத்தி வைப்பதாகவும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி அறிவித்துள்ளார்.

2009-2014 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இராஜாங்க அமைச்சராக இருந்த விமல் வீரவன்சவால் சுமார் 75 மில்லியன் ரூபாய் பணம் மற்றும் சொத்துக்கள் முறைகேடாக சேர்க்கப்பட்ட குற்றச்சாட்டின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் திகதி குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# டிஜிற்றல் கொடுக்கல்-வாங்கல் ஆண்டாக 2020 பிரகடனம்

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டை டிஜிற்றல் கொடுக்கல்-வாங்கல் ஆண்டாக இலங்கை மத்திய வங்கி பிரகடனப்படுத்தியது.

அங்கீகாரம் பெற்ற வணிக வங்கிகள் உள்ளிட்ட ஏனைய நிதி நிறுவனங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் டிஜிற்றல் முறையிலான கொடுக்கல்-வாங்கல்களுக்கு மக்களைப் பழக்கப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

கையடக்க தொலைபேசியூடாக கொடுக்கல் -வாங்கல்களை மேற்கொள்ளும் முறைமையை ஊக்குவித்தல் இதன் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேபோல் தொழில்நுட்ப ரீதியாக இலங்கையை முன்னோக்கிக் கொண்டு செல்வதும் இதன் நோக்கமாகும்.

இதற்காக இலங்கை மத்திய வங்கி கொடுக்கல்-வாங்கல் பிரிவு மற்றும் அறவீட்டு பிரிவு என்பன பல்வேறு உபாய முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளன. (இ-7)

# தொழில் நிபந்தனைகள் விதிக்கப்படாமல் ஆயிரம் ரூபாய் வழங்கினால் நல்லது

## திகாம்பரம் வரவேற்பு



(பத்தனை)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித தொழில் நிபந்தனைகளும் விதிக்கப்படாமல் ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டால் அதனை வாழ்த்தி வரவேற்போம் என முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் எம்.பி.தெரிவித்தார்.

இதேவேளை, மலையகத்தில் சமூக மாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட வேலைத் திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமக்கு வாக்களிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

பத்தனை மவுன்ட்வேர்னன் தோட்டம் மத்திய பிரிவு பகுதியில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் புனர்நிர்மாணத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு என்பது நல்ல விடயம். வழங்கப்பட்ட வாக்குறுதியின் பிரகாரம் அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டால் அதனை வாழ்த்தி வரவேற்போம்.

எனினும், இந்தச் சம்பள உயர்வை அடிப்படையாகக்கொண்டு தொழிலாளர்களுக்கு தொழில் சுமை அதிகரிக்கப்படுமானால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் 18 கிலோ என்பது அதிகரிக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது.

மழைக்காலங்களில் கொழுந்து இருக்கும். ஆனால், வெயில் காலங்களில் அது சாத்தியப்படாது. தற்போதைய காலநிலையில் 18 கிலோ கொழுந்து கொய்வதே கடினமாகத்தான் இருக்கின்றது. எனவே, என்ன நடக்கப் போகின்றது என்பதை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்.

நாம் 50 ரூபாவை பெற்றுக் கொடுக்க முற்பட்டவேளை இங்குள்ள அமைச்சரும் நவீன் திஸாநாயக்கவும் இணைந்து நாடகமாடி அதனைத் தடுத்து நிறுத்தினார்கள்.

இதேவேளை, விரைவில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. எதிர்வரும் காலங்களில் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம். எமது கூட்டணியின் சார்பில் என்னுடன், திலகராஜ், இராதாகிருஷ்ணன், உதயகுமார் ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

எனவே, மலையகத்தில் சமூக மாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட எமது வேலைத் திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு எமக்கு வாக்களிக்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன்.

அதேவேளை, எமது ஆட்சியின் போது அடிக்கல் நாட்டப்பட்ட, நிர்மாணிக்கப்பட்ட நிலையில் ஆயிரம் வீடுகள் உள்ளன. பாதை அமைத்து, மின்சார வசதிகளை ஏற்படுத்தினால் அவற்றை பயனாளிகளிடம் கையளித்து விடலாம். எனவே, அதனை விரைந்து செய்யுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெளிநாட்டு போதைப்பொருள் பொதியை பெற வந்தவர் கைது

(கொழும்பு)

மெக்சிக்கோவிலிருந்து வந்த ஐஸ் போதைப்பொருள் பொதியை பெற்றுக்கொள்ள வந்த ஒருவர், கொழும்பு மத்திய தபால் பரிமாற்ற நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பன்னிப்பிட்டியவைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

மெக்சிக்கோவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பொதியொன்றை மத்திய தபால் பரிமாற்ற நிலைய அதிகாரி, சுங்க அதிகாரி மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் ஆகியோர் சோதனைக்குட்படுத்தினர்.

இதன்போது குறித்த பொதியினுள் 502 கிராம் ஐஸ் போதைப்பொருள் **(Methamphetamine)** இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் குறித்த பொதியை பெற்றுக்கொள்ள வந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)



யாழ்.தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புதிய தொழில்நுட்ப இயந்திரமான லீனக்கில் கதிர்வீச்சு சிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்டு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு ஒரு வருடப்பூர்த்தியை முன்னிட்டு நேற்று முன்தினம் வைத்தியசாலை அத்தியட்சகர் விமலசேன தலைமையில் தலைமை கதிர் சிகிச்சையாளர் ஏ.எல்.எம்.நௌபீஸ் ஏற்பாட்டில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

## பொலிஸ் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் சேவையில் பொலிஸ் கொஸ்தாபல், பெண் தொழில் கொஸ்தாபல் மற்றும் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அரச வர்த்தமானி இலக்கம் 2160 (2020.01.24) அறிவித்தலின் பிரகாரம் நாடளாவியரீதியில் இவ்வாறு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2020.03.24 ஆகும் எனப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (இ-7)

# வெலே சுதாவின் வழக்கு ஒக்டோபருக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

மரண தண்டனை விதிக்கப்பட்ட வெலே சுதா உள்ளிட்ட இருவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கினை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

குறித்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



ஒரு மில்லியன் ரூபாய் பணத்தை மோசடியான முறையில் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் நிதி தூய்மையாக்கல் சட்டத்தின் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புகையிரத பயணிகளுக்கு இலத்திரனியல் அட்டையை அறிமுகம் செய்ய திட்டம்



(இரத்மலானை)

புகையிரத பயணிகளுக்கு இலத்திரனியல் அட்டையை அறிமுகப்படுத்துவதற்கும் ரயில் ஆசனங்களை ஒதுக்கீடு செய்வதற்கு ஒன்லைன் முறை ஒன்றை அறிமுகம் செய்வதற்கும் கட்டமைப்பு ஒன்று அறிமுகப்படுத்தப் படவுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒத்துழைப்பு கிடைத்திருப்பதாக பயணிகள் போக்குவரத்து. மின்சக்தி. சக்திவலு அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். விரைவில் இந்தப் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இரத்மலானை புகையிரதப் பிரிவின் செயற்பாடுகளை ஆராய்வதற்காக நேற்று முன்தினம் அமைச்சர் அங்கு விஜயம் செய்தார். இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## மனைவியுடன் சண்டை

# வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி பலி

(தெஹிவளை)

கொழும்பு - தெஹிவளை நெதிமால பகுதியிலுள்ள வீட்டிற்கு முன்பாக வெட்டுக்காயங்களுக்குள்ளான நிலையில் மீட்கப்பட்ட ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது. குறித்த நபருக்கும் அவரது மனைவிக்கும் இடையில் இடம்பெற்ற குடும்பச் சண்டையையடுத்து. கூரிய ஆயுதம் ஒன்றில் தன்னைத்தானே தாக்கிக்கொண்டதாக விசாரணைகளில் தெரிய வந்தது.

இதனையடுத்து. காயமடைந்த நபரை மீட்டு களுபோவில வைத்தியசாலையில் அனுமதித்தனர். எனினும் அவர் சிகிச்சை பலனின்றி நேற்றுக்காலை உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் 35 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார். சடலம் களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்ட நிலையில். தெஹிவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# வீடு முற்றாக எரிந்து சேதம்



(பள்ளிவாசல்பாடு)

புத்தளம் உடப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பள்ளிவாசல்பாடு தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஓலை வீடு ஒன்று திடீரென தீப்பற்றி முழுமையாக எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியிலுள்ள மக்கள் ஒன்றிணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுத்த போதிலும் வீடு முழுமையாக எரிந்துள்ளது.

குறித்த தீ விபத்துச் சம்பவத்தில் வீட்டிலுள்ள அனைத்துப் பொருட்களும் எரிந்து சேதமடைந்த போதிலும் எதுவித உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1975

### கண்ணன்

நான் எவ்வளவு பெரிய கோவக்காரன்னு தெரியுமா...!



பொறந்து ஒரு வருசமா எங்க அப்பா, அம்மாகிட்டையே பேசல நானு...!

### நந்தினி

ஒருத்தனுக்கு கோபம் வந்தாலும் சிரிச்சுக்கிட்டே இருக்கான்னா...



உனக்கு ஒருநாள் செம்மையா இருக்குனு அர்த்தம்...

### பிரசன்னா




### ஜோதி




### கலை

சாக்லேட் சாப்ட்டா பல் விழும் என்று சொல்றாங்க....



எங்க வீட்ல சாக்லேட் சாப்ட்டா அடியல்ல விழுது...

### திரு




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# புறா அரசன்



வேடன் ஒருவன் ஒரு ஆல மரத்தினடிக்கு வந்தான். வலையை விரித்து, அரிசியைத் தூவி வைத்தான். உடனே அண்மையிலிருந்த ஒரு புதரில் மறைந்து கொண்டான்.

பறவைகள் வந்து வலையில் விழுவதை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தான். அச்சமயம் புறாக்களுக்கு அரசனான சந்திரன் தன் பரிவாரங்களுடன் இரை தேடிக்கொண்டு அந்தப் பக்கமாக வந்தது. உடனே அங்கு அரிசி இறைக்கப்பட்டிருந்ததைக் கண்டு கும்பலாய் இறங்கத் தொடங்கியது. ஆனால், அப்புறாக்களின் அரசன் அதைத் தடுத்தது.

"இந்தக் காட்டில் தானியம் எப்படி வரும்? நிச்சயம் இதை யாரோ இங்கு கொண்டு வந்து தெளித்திருக்க வேண்டும்! இது பற்றி நாம் நன்கு தெரிந்து கொண்டாலொழிய அந்தத் தானியத்தை தின்னக்கூடாது"

"ஏனென்றால் ஒரு மனிதன் பொன் காப்புக்கு ஆசைப்பட்டு எப்படி ஒரு புலியிடம் அகப்பட்டுக்கொண்டு மரணமடைந்தானோ, அதுபோல் இது ஏதோ விபரீதமாகத் தோன்றுகிறது" என்றது புறா அரசன்.

"அது என்ன கதை?" என்று மற்றப் புறாக்கள் கேட்க, புறா அரசன் சொல்லத் தொடங்கியது.

நான், முன்பு ஒரு நாள் இரை தேடிக்கொண்டு இக்காட்டின் தெற்கே செல்லுகையில் அதைக் கண்டேன்...

அது ஒரு கிழப்புலி. மிகவும் வயதாகிவிட்டது. அங்குமிங்கும் ஓடி இரைதேட முடியாத நிலை. அதற்காக வயிறு பசிக்காமல் இருக்குமா? வேளா வேளைக்கு அதற்குப் பதில் சொல்லியாக வேண்டுமே!

அது, வெகு நாட்களாக, ஒரு ஜதை பொன்காப்பு வைத்திருந்தது. அதை யாருக்காகிலும் கொடுத்துவிட வேண்டும் என்று தீர்மானித்திருந்தது.

ஒருநாள், அக்கிழப்புலி, அங்கிருந்த ஒரு ஏரியில் நீராடிவிட்டு, கையில் காப்பை பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தது. அந்தச் சமயம் பார்த்து ஒரு மனிதன், அக்கரைப் பக்கமாக வந்தான். அவனைக் கண்டதும், "ஓ மனிதா! இதோ இந்தப் பொன் காப்புகளை வாங்கிக் கொண்டு போ!" என்று இரைந்து சொல்லி அந்தக் காப்புகளையும் எடுத்துக் காட்டியது.

அதைக்கேட்ட மனிதன் சற்று நின்றான்... ஆலோசித்தான். "இதோ, பொன்காப்பு நமக்கு வலியக் கிடைக்கிறது! ஆனால், அதைக் கொடுப்பதோ ஒரு புலி! அது துஷ்ட மிருகமாயிற்றே! காப்பை வாங்க அதன் அருகில் சென்றதும் அது நம் மீது பாய்ந்துவிட்டால் என்ன செய்வது! என்ன தர்மசங்கடமான நிலை! அதற்காக இந்தப் பொன்காப்பை கைவிடுவதற்கும் மனம் வரவில்லையே! என்ன செய்வது.

"உம் மரணம் இப்போது இல்லாவிட்டாலும் எப்போதோ ஒருநாள் வந்தே தீரப் போகிறது. அதைத் தடுக்க முடியுமா? ஆகையால் எப்படியும் இந்தப் பொன் காப்புகளைப் பற்றிக்கொள்ள வேண்டும்" என்றெல்லாம் யோசித்துத் தீர்மானித்தான் அவன்.

"ஓ புலியாரே! அது பொன் காப்புகள் தானா? நன்றாய்த் தூக்கிக் காட்டும் பார்ப்போம்"

"ஓ! அது வேறு சந்தேகமா உமக்கு! இதோ நன்றாகப் பார்த்துச் சொல் மனிதா!" என்று நன்றாய்த் தூக்கிக் காட்டியது.

"அதுசரி! நீயோ புலி! உன்னிடத்தில் எனக்கு நம்பிக்கை வேண்டுமே?"

"நானே கிழப்புலி... எனக்குப் பல்லும் கிடையாது, நகமும் கிடையாது. இன்னும் என்மீது நம்பிக்கை இல்லையா? வேண்டாம் என்றால் போ!" என்றது.

"நீ சொல்வதெல்லாம் சரிதான்! இருந்தாலும் புலி பொல்லாதது! ஆளைப் பார்த்ததும் கொன்றுவிடும் என்று சொல்கிறார்களே! அதற்கு என்ன சொல்கிறாய்?"

"ஏதோ வறுமையில் வாடுபவனாய்த் தெரிந்தது. அதனால், உனக்கு இந்தப் பொன் காப்புகளைக் கொடுக்கத் தீர்மானித்தேன். இஷ்டம் என்றால் வாங்கிக்கோ. இல்லையென்றால் போய்விடு!"

அதைக்கேட்ட மனிதனுக்கு மனம் குளிர்ந்தேவிட்டது.

பேராசை யாரை விட்டது? அந்தப் புலியோ தேனொழுகப் பேசியது! பிறகு நம்பாமல் இருக்க முடியுமா?

உடனே ஏரியில் இறங்கினான். பாதியில், அங்கிருந்த உளையில் அகப்பட்டுக்கொண்டு விழித்தான். ஒரு காலைத் தூக்க முயற்சித்தான். மற்றொரு கால் உள்ளே போய்க் கொண்டிருந்தது! பாவம்! அவன் என்ன செய்வான். "உளையில் மாட்டிக் கொண்டு விட்டேனே!" என்று தவித்தான்.

அதைக்கண்ட புலி, "பயப்படாதே! இதோ நான் வருகிறேன். உன்னை அந்த உளையிலிருந்து காப்பாற்றுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே அவன் மேல் பாய்ந்து அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது.

அப்போது அந்த மனிதன்... "துஷ்டனின் துஷ்ட சுபாவம் மாறாது" என்பதை எண்ணியபடியே உயிரை விட்டான்.

ஆகையால், நாம் எதையும் மிகவும் ஆழ்ந்து யோசனை செய்த பிறகே செய்ய வேண்டும்.

அப்படிச் செய்தால், நமக்கு ஒரு தீங்கும் ஏற்படாது! என்று கூறி முடித்தது அந்தப் புறா அரசன்.

ஆனால், அதைக்கேட்ட மற்ற புறாக்கள் சிணுங்கின. "ஆமாம். இப்படியெல்லாம் யோசித்தால், நமக்கு ஒரு இரையும் அகப்படாது. மேலும் தீராத சந்தேகம் உள்ளவன், பெரும் துக்கத்தையே அனுபவிப்பான்" என்று சொல்லிக்கொண்டே அத்தானியத்தைத் தின்ன கீழே இறங்கின.

புறா எவ்வளவோ தடுத்தும் கேட்காமல் அவ்வரிசியைக் கொத்தித் தின்னத் தொடங்கியது. அப்போது புறாக்கள் அனைத்தும் அவ்வலையில் சிக்கிக் கொண்டன.

"என் பேச்சைக் கேளாமற் போனீர்களே!" என்று பெருமூச்சு விட்டது அப்புறா அரசன்.

உடனே, "நான் மாத்திரம் தனியாயிருந்து என்ன பயன்!" என்றுமுணுமுணுத்துக்கொண்டே, கீழே இறங்கி வந்து வலையில் அகப்பட்டுக் கொண்டது.

இதைக் கண்ட வேடனும் மகிழ்ச்சியுடன் புறாக்களை பிடிக்க வந்தான். அதுகண்ட அரசனும் அதன் பரிவாரங்களும் பெரும் கலக்கம் அடைந்து இறக்கைகளை அடித்துக்கொண்டு தவித்தன.

அடுத்த நொடியில் தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டது புறா அரசன்.


உடனே மற்ற புறாக்களைப் பார்த்து துன்பம் நேரும் காலத்தில் அறிவை இழப்பது கூடாது. அதிலிருந்து விடுபடவே முயல வேண்டும். அவனே களிப்பு அடைவான்.

"வேடன் நம்மை அணுகுவதற்கு முன், அனைவரும் ஒரே மனத்துடன் நாம் ஆகாயத்தில் பறக்க வேண்டும். அப்படி அனைவரும் கிளம்பினால் வலையும் பெயர்த்துக்கொண்டு நம்மோடு வந்துவிடும். அதன்பிறகு நாம் எளிதில் தப்பித்துக் கொள்ளலாம்"

புறாக்கள் அனைத்தும் அரசன் சொற்படி ஒரே சமயத்தில் உயரே கிளம்பின. வலையைத் தூக்கிக்கொண்டு அந்தப் புறாக்கள் ஆகாயத்தில் பறந்த காட்சி வேடன் எதிர்பாராதது. அவர்கள் பின்னால் சிறிது தூரம் ஓடினான்.

பிறகு, முடியாது என்று தெரிந்து வலையும் போன சோகத்தில் வீடு திரும்பினான். புறாக்களின் அரசன், எலி நண்பனிடம் சென்று அவனது உதவியால் வலையைக் கடித்து விடுதலை அடைந்தனர்.

## வழிகாட்டுங்கள்



## விடுகதைகளும் விடைகளும்

- வட்ட வட்டப் பாய் வாழ்வு தரும் பாய் ஊரெல்லாம் சுற்றும் பாய், ஒவ்வொருவரும் விரும்பும் பாய்.

  **ரூபாய்**

- நிலத்திலே முளைக்காத புல்-அது நிமிர்ந்து நிற்காத புல்.

  **தலை முடி**

- கண் சிமிட்டும் ஒன்று: மணி அடிக்கும் மற்றொன்று: கண்ணீர் வடிக்கும் இன்னொன்று.

  **மின்னல், இடி, மழை**

- கண் இல்லாத நான், பார்வையிழந்தவர்க்குப் பாதை காட்டுவேன்.

  **கைத்தடி**

- ஆள் இறங்காத கிணற்றிலே மரம் இறங்கிக் கூத்தாடுது.

  **தயிர் கடையும் மத்து**

- அம்மாளோ சும்மா படுத்திருப்பாள் மகள் முன்னும் பின்னும் ஓடிக்கொண்டிருப்பாள்.

  **அம்மியும் குழவியும்**





மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் க.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொண்டார். இதில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பதக்கம் அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இணைப்பாட விதான செயற்பாட்டில் வெற்றி பெற்ற மாணவர்கள் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் ஆகியோருக்கான சிறப்பு பரிசில்களும் வழங்கப்பட்டன. (படங்கள்-கொடிகாமம் செய்தியாளர்)

# "டயமண்ட் பிரின்சஸ்" கப்பலில் கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 175 ஆக உயர்வு

(டோக்கியோ)

ஜப்பானின் யோகோகாமாவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 'டயமண்ட் பிரின்சஸ்' கப்பலில் பயணித்த மேலும் 40 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட் டனர்.

ஜப்பான் சுகாதாரத்துறை அமைச்சர் கசுனோபுகடோ இந்தத் தகவலை தெரிவித்தார்.இதன் ஊடாக 'டயமண்ட் பிரின்சஸ்' கப்பலில் இதுவரை 175 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது. பயணிகள் மற்றும் பணியாளர்கள் அடங்கலாக மொத்தம் மூவாயிரத்து 711 பேருடன் வருகை தந்த டயமண்ட் பிரின்சஸ் கப்பலை கடந்த 4ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை தனிமைப்படுத்தி வைக்குமாறு ஜப்பான் நாட்டு அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

குறித்த கப்பலில் இருந்து கடந்த மாதம் ஹொங்கொங்கில் இறங்கிய பயணிக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து கப்பல் தனிமைப்படுத்தி நிறுத்தப்பட்டது.

அதிலுள்ள பயணிகளுக்கு தினந்தோறும் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. அதில் இதுவரை 300 பேரிடம் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 175 பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது. எதிர்வரும் 19ஆம் திகதி வரை குறித்த கப்பல் இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் என அதிகாரிகளை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அத்துடன், பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருவதாக கப்பலில் உள்ள பணியாளர்கள் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




# இலங்கைக்கு அணுமின் நிலையத்தை வழங்க விரும்பும் ரஷ்யா-தூதுவர் தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கு அணுமின் உற்பத்தி நிலையம் ஒன்றை பெற்றுக்கொடுக்க ரஷ்யா விருப்பத்துடன் இருப்பதாக இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் யூரி மெட்டேரி "ஸ்புட்னிக்" ஊடக நிறுவனத்திடம் தெரிவித்தார்.

மின்சார நெருக்கடி மற்றும் நிலக்கரி அனல் மின் நிலையங்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசு என்பனவற்றைத் தடுப்பதற்கான தீர்வாக அவர் இதனைத் தெரிவித்தார்.

ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சர்ஜி லெவரொஃவ் இலங்கைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த போது இது தொடர்பாக இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்த எதிர்பார்த்த போதிலும் இலங்கை தரப்பில் அதற்கு அக்கறை காட்டப்படவில்லை என ரஷ்ய தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# தனியார் துறையினருக்கும் தபால்மூலம் வாக்களிக்கும் வாய்ப்பை வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கும் வாய்ப்பை தனியார் துறையினருக்கும் பெற்றுக் கொடுக்குமாறு கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கபே அமைப்பு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களில் வாக்களிப்பதற்கு பொதுமக்களிடம் குறைந்தளவிலான ஆர்வமே காணப்படுவதாகவும், தலைநகர் போன்று ஏனைய பிரதான நகரங்களில் தனியார் நிறுவனங்களில் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் நபர்கள் வாக்களிப்பதற்காக தமது சொந்த ஊர்களுக்கு செல்வதற்கு தயக்கம் காட்டுவதாகவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டது.

தேர்தலில் வாக்களிப்பதற்காக தனியார் துறைகளின் ஊழியர்களுக்கு அவர்களின் வாக்களிப்பு நிலையங்கள் காணப்படும் தூரத்தை கருத்திற்கொண்டு விடுமுறை வழங்கும் முறை தற்போது நடைமுறையிலுள்ளது. எனினும், தூரப் பிரதேசங்களில் வசிக்கும் சிலர் வாக்களிப்பதற்கு மாத்திரம் பணத்தை செலவிட்டு சொந்த ஊர்களுக்கு சென்று திரும்புவது பிரச்சினைக்குரிய விடயமாகும் என அந்த கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-7)







புலோலி,புற்றாளை மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் கி.குகநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில், பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) ந.திருலிங்கநாதன் கலந்து கொண்டார்.

நம்மை வெற்றி பெற யாரும் பிறக்கவில்லை என்பது பொய் பிறரைத் தோற்கடிக்க நாம் பிறந்திருக்கிறோம் என்பது உண்மை

–மாவீரன் அலெக்சாண்டர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

# உங்களுக்குள் மோதாதீர்கள் எதை, எப்படி, எவ்வாறு செய்வீர்கள் என்று கூறுங்கள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியைக் கடுமையாக விமர்சிக்கத் தலைப்பட்டுள்ளன.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அவர்கள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனின் கட்சிச் சின்னமான பொங்கல் பானைக்கு மக்கள் பாடம் புகட்டுவர் என்பதாக கருத்துரைத்துள்ளார்.

கட்சி தெரிவு செய்த ஒரு சின்னத்தை வைத்து விமர்சிப்பதென்பது சிறுபிள்ளைத்தனமானது.

அதிலும் பொங்கல் பானை என்பது தமிழ் மக்களின் பண்பாட்டு அடையாளம். எனவே தமிழர்களின் செய்ந்நன்றி மறவாமையின் அடையாளமாக இருக்கும் பொங்கல் பானைக்கு மக்கள் பாடம் புகட்டுவர் என மாவை சேனாதிராசா கூறிய கருத்து தமிழ் இனத்தின் பண்பாட்டு அடையாளத்தை கொச்சைப்படுத்துவதாக உள்ளது.

மாறாக இரா.சம்பந்தர் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் ஒரே கொள்கை கொண்டவை என்றும் அவை இரண்டுக்கும் எந்தவித வித்தியாசமும் கிடையாது என்றவாறும் கருத்துரைத்துள்ளார்.

இஃதும் தமிழ் மக்கள் மத்தியில் எந்த தமிழ் அரசியல் தரப்பையும் நியாயப்படுத்தப் போதுமானதல்ல.

மாறாக, தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் தரப்புகள் எத்தன்மையானவை என்பதை தமிழ் மக்கள் மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

தேவையாயின் ஒவ்வொரு அரசியல்வாதிகளும் எத்தன்மையர் என்ற பெரியதொரு பட்டியலை தமிழ் மக்களால் வெளியிட முடியும்.

எனவே ஒருத்தரை ஒருத்தர் சாடுவதன் மூலம் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறலாம் என்று நினைத்தால் அது ஒருபோதும் நடக்கமாட்டாது என்பது நிறுதிட்டமான உண்மை.

மாறாக தேர்தலில் நிற்கப்போகும் ஒவ்வொரு தமிழ் அரசியல் கட்சியும் தங்களின் கொள்கை என்ன என்பதையும் அதை அடைவதற்காக எதை எவ்வாறு எப்படியான பொறிமுறையூடாகச் செய்வது என்பதையும் அவ்வாறு தங்களால் மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை என்றால் அதற்குப் பரிகாரமாகத் தாம் என்ன செய்வோம் என்பதையும் தமிழ் அரசியல் கட்சிகள் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இதனோடு கட்சிப் பிரதிநிதிகளின் சொத்துக்களை வெளிப்படுத்துவதுடன் தங்களைப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்தால் தமிழ் மக்களுக்கு எவ்வாறு சேவையை வழங்குவோம் என்பதையும் தெரியப்படுத்த வேண்டும். இதனையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதைவிடுத்து ஒருத்தரை ஒருத்தர் முரண்பட்டுக் கொண்டு விமர்சனத்தில் ஈடுபட்டால், தமிழ் மக்கள் வாக்களிப்பதைத் தவிர்ப்பர்.

இவ்வாறு வாக்களிப்பதை மக்கள் தவிர்த்தால், நிலைமை என்னவாகும் என்பதை தமிழ் அரசியல்வாதிகள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

# தேர்தலின் பின் எரிபொருள் விலையும் நீர்க் கட்டணமும் அதிகரிக்கப்படலாம்

## தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

தேர்தலின் பின்னர் எரிபொருள் விலையை 30 வீதத்தாலும் நீரக்கட்டணத்தை 20 வீதத்தாலும் அரசாங்கம் அதிகரிக்கும் என தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

இராஜகிரியவில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் தேசிய ஊழியர் சங்கம் இது தொடர்பில் தெளிவூட்டியது.

இது தொடர்பாக தேசிய ஊழியர் சங்கத்தின் உப அமைப்பாளர் ஆனந்த பாலித்த தெரிவித்தார்

உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை துரிதமாக குறைவடைந்துள்ளது. விலைச்சூத்திரம் நடைமுறையில் இருந்திருந்தால், 11 ரூபாயால் டீசல் மற்றும் பெற்றோல் விலையை குறைத்திருக்க முடியும். ஒரு லீற்றர் 92 ரக ஒக்டேன் பெற்றோலுக்கு அரசாங்கம் தற்போது 55 ரூபாயை வரியாக அற விடுகின்றது. ஒரு லீற்றர் 95 ரக சுப்பர் டீசலுக்கு 68 ரூபாயை வரியாக அறவிடுகின்றது. சாதாரண டீசலுக்காக 15 ரூபாய் வரியை அறவிடுகின்றது. ஒரு லீற்றர் சுப்பர் டீசலுக்கு 35 ரூபாயை பெறுகின்றது. விலைகள் தொடர்பான தகவல்கள் தற்போது பகிரங்கப் படுத்தப்படுவதில்லை. 2005 ஆம் ஆண்டு ஜூலை மாதம மகிந்த ராஜபக்ஸ விலைச்சூத்திரத்தை இரத்து செய்தார். அதனை இரத்து செயது விட்டு இந்தியன் லங்கா ஒயில் நிறுவனத்திற்கு 8 வீத வங்கி முறிளுகள் விநியோகத்தின் ஊடாக 11,000 மில்லியனை செலுத்தினார்கள். அதற்கு பதிலாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அரசாங்கம் செலுத்த வேண்டிய 34,000 மில்லியனில் ஒரு சதத்தையேனும் வழங்கவில்லை. தேர்தல் நிறைவு பெறும் வரையிலேயே அரசாங்கம் இவ்வாறு செயற்படும்.என ஆனந்த பாலித்த குறிப்பிட்டார்.

எரிபொருள் விலை 30 வீதத்தாலும் நீரக்கட்டணம் 20 வீதத்தாலும் அதிகரிக்கப்படும் என்ற முன்னெச்சரிக்கையை வாசுதேவ நாணயக்கார விடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-3)

# யாழ்.பல்கலை மாணவிகளின் கைபேசிகளை திருடியதாக

## சந்தேகத்தில் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவிகளின் கைபேசிகளை திருடியதாக சந்தேகிக்கப்படும் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் பல்கலைக்கழக மாணவிகளின் கைபேசிகள் திருடப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதியப்பட்டிருந்தன.

இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச் சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், நல்லூர் பகுதியில் வைத்து இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் திருட்டுப் பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் அந்தப் பகுதியிலுள்ள தொலைபேசி விற்பனை நிலைய உரிமையாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது, பல்கலைக்கழக மாணவிகளின் கைபேசிகளை திருடியதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நால்வரும் யாழ்ப்பாணம் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-3,14)

# செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளி/சோரன்பற்று சி.சி.த.க பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வானது நாளை 14ம் திகதி பிற்பகல 1.30 மணி யளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் நடராசா ராமதாஸ் தலைமையில் இடம் பெறும். இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி சயந்தினி சிவநீதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார் (ம-3)

# ரஞ்சன்-கிஹான் இடையேயான தொலைபேசி உரையாடல்களின் பிரதிகளை உடன் வழங்கவும்

## சட்டமா அதிபர் விடாப்பிடி

(கொழும்பு)

இடைநீக்கம் செய்யப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலபிட்டிய மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக் கவிற்கு இடையில் இடம்பெற்ற உரையாடல்களை வழங்குமாறு சட்டமா அதிபர் கோரினார்.

அதன்படி இவர்களுக்கு இடை யில் இடம்பெற்ற 12 தொலைபேசி உரையாடல்களின் ஒலி, ஒளிப்பதிவுகளின் பிரதிகளை அனுப்புமாறு பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவிறகு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா இந்த அறிவித்தலை விடுத்தார். (ஜ)

# வர்ணனைப் பேருரையும் சொற்பொழிவும்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு கோணாவளை வைரவப் பெருமாள் ஆலய விகாரி வருட அலங்கார உற்சவப் பெருவிழா கடந்த 6 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 9 ஆம் திருவிழா, மாலை 4 மணியளவில் அபிஷேக ஆராதனை வழிபாடு, சுவாமி உள்ள வீதி உலா, வெளி வீதி உலா வரும் திருக்காட்சியும் இடம்பெறும்.

இவ்விழாவில் தெய்வீக வர்ணனைப் பேருரையை செந்நாப் புலவர் மதுரகவி காரை, எம்.பி. அருளானந்தனும சமய சொற்பொழிவை யாழ்.சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தாவும் ஆற்றுவர். (இ-7)

# வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**நீங்கள் வாழ்க்கையை விரும்புகிறீர்களா? அப்படியானால் நேரத்தை வீணடிக்காதீர்கள். ஏனெனில் வாழ்க்கை நேரத்தைக் கொண்டு தான் உருவாக்கப்பட்டிருந்தது.-பெஞ்சமின் பிராங்கிளின**

# சத்திய தரிசனம்

## சவாலைச் சந்திப்போம்



❖ உலகில் "அன்பு செய்யும் ஒரே இனம் மனித இனம் மட்டுமே. இங்கு ஒரே ஒரு மதம் மட்டுமே இருக்கிறது. அது தான் அன்பு மதம்.

❖ உலகில் "இதயத்தின் மொழி" என்ற ஒரே ஒரு மொழி மட்டுமே இருக்கிறது.

❖ அறிவு எதையும் பிரித்துப் பார்க்கும். ஆனால் அன்பு சேர்த்து வைக்கும்.

❖ ஒவ்வொரு அனுபவமும் ஏதாவது ஒரு உணர்வின் வழியாக, உடலளவில் விளைவை ஏற்படுத்தும்.

❖ உன்னைக் கடவுளின் வேலையாள் என்ற சிந்தனையை வளர்த்துக் கொள். உணர்ச்சிகளுக்கு அடிமையாகாதே.

❖ அலைபாயும் மனதால் சமுதாயத்திற்கு சேவை செய்ய முடியாது.

❖ ஒரு மனிதனின் நன்னடத்தை, அவனுடைய மனநிலையைச் சார்ந்திருக்கிறது

❖ வாழ்க்கை ஒரு சவால் அதனைச் சந்தியுங்கள். வாழ்க்கை ஒரு கனவு அதனை நனவாக்குங்கள். வாழ்க்கை ஒரு விளையாட்டு அதில் ஈடுபடுங்கள். வாழ்க்கை அன்புமயம் அதனை அனுபவியுங்கள்.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** வேம்பிராய், கனகம்புளியடி சந்தி, சரசாலை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** பகல அளுத்வத்த கிராமம், கூமாங்குளம் கிராமம், சாம்பல்தோட்டம், இலுப்பைக்குளம். மதவு வைத்த குளம் கிராமம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில** பெரியதம்பனையிலிருந்து மடு வரைக்கும், மடு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணம்; ரி.சி.சி. அணிக்கு முதலாவது வெற்றி





விக்ரம்- ராஜன்- கங்கு வெற்றிக்கிண்ண தொடருக்கான 4 ஆவது தகுதிகாண் போட்டி கடந்த சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. ரி.சி.சி. அணி ஓல்ட் கோல்ஸ் அணியை 3 இலக்குகளால் வெற்றி பெற்று தமது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.


முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணியினர் 6 இலக்குகளை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றனர். மதூஸன்-26, மோகனதீபன்-29, நிரோஸன்-22, சிறிகுகன்-63, கஜீபன்-26 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் தர்சிகன் 3 இலக்குகளையும் தீபநாதன், சுஜன், அனுரதன் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ரி.சி.சி. அணி 29.1 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றனர். அசோக்-10, சுஜன்-21, தர்சிகன்-14, லவகாந்-48, சிவராஜ் ஆட்டமிழக்காது 42, ரஜின்தன்-18 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் ஓல்ட்கோல்ஸ் அணி சார்பாக சிறிகுகன்-3, விதாகன், நிரோஸன், நிலக்ஸன், திலீபன் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 11 ஆவது ஆண்டாக நடத்தும் தரவரிசைப் பட்டியலுக்கு ரி.சி.சி. அணி 5.77 புள்ளிகளையும் ஓல்ட் கோல்ஸ் அணி 2.66 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

# சீறிப் பாய்ந்த காளைகள்





இந்துக்களின் புனித நாளாகிய தைப்பூச தினத்தன்று முல்லை மாவட்ட மாட்டு வண்டி சவாரி சங்கத்தினர் நடத்திய தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்றான மாபெரும் மாட்டு வண்டி சவாரி போட்டி விசுவமடு தொட்டியடி சவாரித்திடலில் நடைபெற்றது.

இதில் அ,ஆ,இ,ஈ,உ என்று ஐந்து பிரிவுகளில் வடக்கு மாகாணத்தில் இருந்து 73 சோடி மாடுகள் கலந்து போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. (க-318)

# நாம் கற்கும் கல்வியானது எமது இனத்திற்கானதாக இருக்க வேண்டும்

## சிறீதரன் எம்.பி.தெரிவிப்பு


எமது பண்பாட்டினை கட்டிக் காப்பதற்காய் மாணவர்கள் கற்க வேண்டும் எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பளை மாசார் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது. குறித்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழர்களுக்கு என்று தனித்துவமான கலாசாரங்களும் பண்பாட்டியலும் இருக்கிறது. எங்களிடம் இருந்து பல இனங்கள் தங்களது கலாசாரத்தை கட்டியெழுப்பியிருக்கிறார்கள். ஆனால் நாங்கள் எங்கள் பண்பாட்டியலை மறந்தவர்களாக அந்நிய கலாசாரத்திற்கு அடிமைப்பட்டவர்களாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதுவும் ஒருவகையான இன ஒடுக்கு முறையே.

நாம் கற்கும் கல்வியானது எமது இனத்திற்கானதாயும் எமது பண்பாட்டினையும் கட்டிக்காக்கும் வகையில் அமைய வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

பாடசாலை முதல்வர் கருணானந்தன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் கபிலரூபன், கிளிநொச்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சிவபாலன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உபதவிசாளர் மு.கயன்.அயற் பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (க)









தென்மராட்சி பிரதேச செயலகத்தால் அண்மையில் நடத்தப்பட்ட பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் நாவற்குழி காந்தி விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இரண்டாம் இடத்தினை மட்டுவில் வளர்மதி அணி பெற்றுக் கொண்டுள்ளது. (க-30)

## மகிந்த இந்தியா...

தியாவிடம் கால அவகாசம் கோரியது மக்களின் நன்மைக்காகும் என தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

எனவே இதுதொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் விமர்சனம் சிறுபிள்ளைத்தனமானதாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அனைத்து அரசாங்கங்களும் வெளிநாடுகளில் இருந்து கடனைப் பெற்றுக் கொள்கின்றன.

நாட்டின் மொத்த கடன் தொகை கடந்த 2005ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 200 பில்லியனாக இருந்தது. அது கடந்த 2014ஆம் ஆண்டில் 7 ஆயிரத்து 400 பில்லியனாக அதிகரித்திருந்தது. மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கடந்த 9 வருட காலத்தில் 5 ஆயிரத்து 200 பில்லியன் ரூபாய் கடன் பெற்றிருந்தது.

ஆனால் 2014இல் இருந்து 2019ஆம் ஆண்டாகும்போது மொத்த கடன்தொகை 14 ஆயிரம் பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது. கடந்த அரசாங்கம் 5 வருடத்தில் 6 ஆயிரத்து 600 பில்லியன் ரூபாய் வெளிநாடுகளில் இருந்து கடன்பெற்றுள்ளது.

அதன் பிரகாரம் இந்த வருடம் 480 பில்லியன் ரூபாய் வெளிநாட்டு கடன் தவணைகள் செலுத்த வேண்டி இருக்கின்றது.

நாட்டின் தற்போதைய நிலைமையில் கடன் தவணையை செலுத்த நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் அதன் பாதிப்பு நாட்டு மக்களுக்கே ஏற்படுகின்றது.

அதனால் பொறுப்புவாய்ந்த அரசாங்கம் என்ற வகையில் மக்களின் நன்மை கருதி, இந்தியாவுக்கு செலுத்தவேண்டிய கடன் தவணையை மேலும் 3 வருடங்கள் காலம் தாழ்த்துமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, இந்திய விஜயத்தின்போது, இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## முகநூல் ஊடாக...

மாணவனின் வீட்டின் மீது தாக்குதலை மேற்கொண்டதாக ஆவா குழு தமது முகநூல் ஊடாக உரிமை கோரியுள்ளது

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோயிலடியில் உள்ள குறித்த மாணவனின் வீட்டிற்குள் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு நுழைந்த நால்வர் மாணவனை அழைத்துள்ளனர்.

மாணவன் அங்கில்லாத நிலையில் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் கண்ணாடிகள் மற்றும் யன்னல் கண்ணாடிகளை அடித்து சேதப்படுத்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று புதன்கிழமை ஆவா குழு என தம்மை அடையாளப்படுத்தி முகநூலில் செயற்பட்டு வரும் சிலர் தமது முகநூலில் தமிழர்களின் அடையாளமாக காணப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் நடைபெறும் அனைத்து செயற்பாடுகளுக்கும் எதிராக எமது நடவடிக்கைகள் இடம்பெறும்.

அந்த வகையில் சமீபத்தில் நடைபெற்ற மாணவ பெண்களுக்கு எதிராக ராக்கிங் மேற்கொள்ளும் நபரின் வீட்டின் மீது நேற்று தாக்குதல் நடைபெற்றது. ராக்கிங் என்ற பெயரில் மாணவர்களுக்கு வேதனை ஏற்படுத்தும் பட்சத்தில் இதுபோன்ற தண்டனை இனி வரும் காலங்களில் தொடரும் என முகநூலில் பதிவிட்டுள்ளனர். (ம-3,114)

## அதிகார பரவ...

ஐரோப்பிய தூதுக்குழுவினரிடம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் நிர்வாக இயக்குநர் பவோலா பம்பலோனி தலைமையிலான குழுவினர் கடந்த 10.02.2020 அன்று பாராளுமன்றத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின்போது கடந்த காலங்களில் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாணும் முகமாக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு நடைமுறைகள் தொடர்பில் தெளிவுபடுத்தினார். மேலும் இலங்கை அரசாங்கமானது ஐரோப்பிய ஒன்றியம் அங்கம் வகித்த இணைத்தலைமை நாடுகள் இந்தியா ஐக்கியநாடுகள் சபை மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகளிற்குவழங்கிய வாக்குறுதிகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

விடுதலைப் புலிகளுடனான யுத்த காலத்தின்போது இந்த வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் வழங்கியிருந்தபோதும் அவற்றினை நிறைவேற்றத் தவறியுள்ளமையையும் சுட்டிக் காட்டினார். விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் காரணமாக இந்த வாக்குறுதிகள் கைவிடப்படலாகாது என்றும் போராட்டம் தமிழ் மக்களினுடையது. எனவே தமிழ்மக்களின் ஒன்றிணைந்த பிரிக்க முடியாத பிளவுபடாத நாட்டினுள் அதிகாரப் பரவலாக்கம் என்ற நியாயமான கோரிக்கையை சர்வதேச சமூகம் மதிக்க வேண்டும் எனவும் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.

இலங்கை அரசாங்கம் கொடுத்த இந்த வாக்குறுதிகள் தொடர்பில் சர்வதேச சமூகம் பகிரங்கப்படுத்த வேண்டும் எனவும் இந்த விடயத்தில் சர்வதேச சமூகத்தின் அமைதியானது இலங்கை அரசாங்கம் இந்த வாக்குறுதிகளில் இருந்து விலகிச் செல்வதற்கு இன்னும் ஊக்கத்தினை கொடுப்பதாகவும் வலியுறுத்தினார்.

மேலும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் தீர்மானங்களை இலங்கை அரசாங்கம் முழுமையாக நிறைவேற்றுவதனை சர்வதேச சமூகம் உறுதி செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்திய இரா.சம்பந்தன் விசேடமாக இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பாதுகாப்பு தரப்பினரிடமும் அரசாங்க அதிகாரிகளிடமும் தங்கள் உறவினர்களால் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்னும் உண்மை கண்டறியப்பட வேண்டும் எனவும்வலியுறுத்தினார்.

அப்படியானவர்கள்காணாமல் போயிருந்தால் அதற்கு பொறுப்பாக இருந்த அதிகாரிகள் விசாரிக்கப்பட்டு உண்மை உறுதி செய்யப்படல் வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

எமது மக்கள் இந்த உண்மையினை கண்டு கொள்வதற்காக ஏங்கி தவிக்கிறார்கள் என்றும் சர்வதேச சமூகம் ஐந்தே கருமத்தில் உறுதியாக செயற்பட்டு உண்மையினை கண்டறிய உதவ முன்வர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கருமங்கள் தொடர்பில் தமது நிலைப்பாடுகள் மிக விரைவில் தாம் எடுக்கும் தீர்மானங்கள் மூலம் வெளிப்படும் என ஐரோப்பிய ஒன்றிய குழுவினர் வாக்குறுதி அளித்தனர் என்றுள்ளது. (ம-3)

## விக்னேஸ்வர...

தமிழ் மக்களின் உண்மையான, நேர்மையான தலைமைத்துவமாக தமது தலைமைத்துவம் வந்துவிடக்கூடாது என்பதற்காகவே இந்தப் புதிய கூட்டு உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழிலுள்ள அக்கட்சியின் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது புதிய கூட்டணி தொடர்பான கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் கூறுகையில், "நான்கு நபர்கள் கூடியநிலையில் நான்கு கட்சிகள் கூட்டுச் சேர்ந்ததாக செய்திகள் வெளிவந்திருக்கின்றன. எம்மைப் பொறுத்தவரையில் அது நான்கோ, பத்தோ, பதினைந்தோ என்பதல்ல. உண்மையில் எந்த அடிப்படையில் அரசியல் ரீதியாகச் செயற்படுகின்றனர் என்பதே முக்கியமானது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகியதில் இருந்து கொள்கை ரீதியாக அந்தக் கூட்டமைப்பு பிழை விடுகிறது என்பதையும் ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலை முடக்குகின்ற அளவிற்கு விலை போயிருக்கிறது என்ற குற்றச்சாட்டையும் பத்து வருடங்களாக நாம் முன்வைத்து வருகிறோம்.

அதனடிப்படையில் புதிய தலைமைத்துவம், நேர்மையான தலைமைத்துவம் அவசியமென்ற வகையில் பத்து வருடங்கள் கடந்து இயங்கிவரும் நாம் இன்றைக்கு இரண்டாம் பெரும் கட்சியாக வடக்கு கிழக்கில் இருக்கிறோம்.

அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கையில் எங்களுடைய வளர்ச்சியைத் தடுப்பதற்காக கொள்கை ரீதியாக கூட்டமைப்பிலிருந்து எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல் இன்னுமொரு மாற்று அமைப்பு என்று கூறிக்கொண்டு வரும் தேர்தலில் எங்களுக்கு வரக்கூடிய அங்கீகாரத்தை குழப்புவதற்கு முயற்சிக்கின்றார்கள்.

எம்மைப் பொறுத்தவரையில் இன்றைக்கு நேர்மையான அரசியலை, கொள்கை சார்ந்த அரசியலைக் கொண்டு போகக்கூடிய ஒரேயொரு தரப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். இந்த முன்னணியுடன் இணைந்து செயற்படுகின்ற சிவில் சமூகம், புத்திஜீவிகள் இந்த இனத்திற்கு தலைமை தாங்கக்கூடாது என்ற சிந்தனையில் பலரும் செயற்படுகின்றனர்.

தமிழ் மக்கள் ஒரு புதிய தலைமைத்துவத்தை தேடிக் கொண்டிருக்கிற நிலைமையில், அந்தப் புதிய தலைமைத்துவம் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியாக அடையாளப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் வரும் தடைகள் எல்லாத்தையும் தாண்டி தமிழ்த் தேசியமும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் நிச்சயமாக வெற்றி பெறும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது" என்று அவர் குறிப்பிட்டார். (ம-3)

## தனிச் சிங்கள...

கொண்ட நேரத்தில் இருந்து இன்று வரையில், தான் ஒரு சிங்கள பௌத்த தலைவன் என்பதை பல செயற்பாடுகளின் ஊடாக நிரூபித்துள்ளார்.

நாட்டில் ஒரு சட்டமே நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். எமது நாட்டில் இனங்களுக்கிடையில் சட்டங்கள் வேறுபடுத்தப்பட்டுள்ளன. ஒரு நாட்டில் ஒரு சட்டத்தையே அனைத்து இன மக்களும் பின்பற்ற வேண்டும் என்ற கொள்கையினை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதிக்கு முழு ஒத்துழைப்பினையும் பெரும்பாலான மக்கள் வழங்க வேண்டும்.

பாராளுமன்றத்தின் பாரம்பரிய முறைமைகளே பல நெருக்கடிகளுக்கும், அரச நிர்வாகத்திற்கும் தடையாக உள்ளன. எனவே உருவாகும் தனிச் சிங்கள அரசாங்கத்தில் அடிப்படைவாத கொள்கைகளற்ற தமிழ் - முஸ்லிம் இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய அரசியல்வாதிகள் உள்வாங்கப்பட வேண்டும்" என கலகொட அத்தே ஞானசார தேரர் கூறினார். (ம-3)

## உயர்தரத்தில்...

வர்களுக்கும் பல்கலைக்கழகத்திற்கான வாய்ப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். உயர்தரத்தில் சித்தியடைந்த அனைவருக்கும் பல்கலைக்கழக வாய்ப்பை வழங்கும் சவாலை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது என்றார். (ம-3)


மெகா பவர்
திகதி 2020/02/12
சீட்டிழுப்பு இலக்கம் 0497
G 12 24 73 79 80

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 12-02-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2390
M 12 33 53 79

தன நிதானய
திகதி - 2020.02.12
சீட்டிழுப்பு இலக்கம் - 264
A 41 54 61 70

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 12.02.2020
சீட்டிழுப்பு இலக்கம் 1017
Y 0 5 0 0 3 5

ராசி அதிர்ஷ்டம்
திகதி 12/02/2020 வெற்றி வாரம் 2767 வர்ணம் பச்சை
கடகம் 09 18 35 51
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,399,946
2020/02/13 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 322
சீட்டிழுப்பு திகதி 12.02.2020 நீலம்
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 13 24 62
விதி எண் 1
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 51,648,092
2020/02/14 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 881
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.02.12
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,705,750/-
வெற்றி இலக்கங்கள் 22 32 33 47 F

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல: 3300 திகதி: 2020.02.12
பச்சை புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 24 38 68 X
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 32,918,315/-
Web: www.dlb.lk

## நெடுங்கேணி...

இதன்போது அரை ஏக்கர் அளவிலான குறுகிய நாட்களுக்குள் பயிரிடப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட கஞ்சா செடிகள் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வவுனியாவிலிருந்து சென்ற விசேட அதிரடிப்படையினரே குறித்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதுடன் கைப்பற்றபட்ட கஞ்சா செடிகளை போகஸ்வெவ பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத நிலையில் போகஸ்வெவ பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,299)

## சாரதி அனுமதிப்...

சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள முடியும் என போக்குவரத்துத்துறை ராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

யாரும் தமது நேரங்களை வீணடிக்கக் கூடாது என்ற அடிப்படையிலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ள ஏற்கெனவே இருந்த டோக்கன் முறை மாற்றப்பட்டு இணையத்தின் ஊடாக மருத்துவம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்களுக் கான முன் அனுமதி பெறப்படும் முறை தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் ராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-3)

## மாங்குளம் வைத்...

யிட்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் குறித்த விடயம் தொடர்பான விபரங்களை சேகரிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டதோடு குறித்த இடத்தை இன்றைய தினம் அகழ்வு செய்வதற்கும் உத்தரவிட்டுள்ளார்

இந்த விடயம் குறித்து மேலும் தெரிய வருகையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் வைத்தியசாலை வளாகத்தில் புதிதாக புனர்வாழ்வு வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்ட நிலையில் குறித்த வைத்தியசாலை கட்டடங்களை அமைப்பதற்காக குறித்த காணி துப்புரவு பணிகள் இடம்பெற்று வந்தன. இதன்போது அங்கு கண்ணி வெடிகள் இருப்பதாக தெரிவித்து அந்த பகுதி மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களினால் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் குறித்த் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் இடம்பெற்று வந்த நிலையில் குறித்த காணியின் ஒரு பகுதியில் மனித எச்சங்கள் காணப்பட்டதை அவதானித்த பணியாளர்கள் மாங்குளம் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

மாங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் குறித்த விடயம் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி எஸ்.லெனின்குமாரின் கவனத்திற்கு கொண்டு செல்லப் பட்டது. நேற்றுக் காலை குறித்த இடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி எஸ.லெனின் குமார் குறித்த இடத்தை பார்வையிட்டார்

குறித்த இடத்தை பார்வையிட்ட நீதிபதி, குறித்த இடத்தின் ஆரம்பகால வரலாறு தொடர்பாக ஆராயுமாறு மாங்குளம் பொலிஸாருக்கு உத்தரவு வழங்கியதோடு இன்றைய தினம் குறித்த பகுதியை அகழ்வு பணிகள் மேற்கொள்வதற்கும் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த இடத்தில் மனித எச்சங்கள் மற்றும் சீருடைகளின் பாகங்கள் சிலவும் காணப்படுகின்றன. 2009க்கு முற்பட்ட காலப்பகுதியை சார்ந்ததாக குறித்த மனித எச்சங்கள் இருக்கலாம் என கருதப்படுகின்றது. (ம-3.281)

## ஜனாதிபதி...

களை இடைநிறுத்தும் அதிகாரம் இல்லை என சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளார்.

பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன கோரியிருந்த சட்ட ஆலோசனைக்கு பதிலளிக்கும் வகையில் சட்டமா அதிபர் இதனை அறிவித்துள்ளார்.

நீதிமன்றத்தில் இருக்கும் சட்ட ரீதியான நடவடிக்கை ஒன்றை நீதிமன்றத்தினால் மாத்திரமே இடைநிறுத்த முடியும் என சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் ஊழல் விசாரணைக் குழுவின் செயலகத்திற்கு கிடைத்த முறைப்பாடுகளின அடிபபடையில், குற்றவியல் விசாரணை திணைக்களம், பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு, விசேட விசாரணைப பிரிவு என்பன விசாரணை நடத்தியதாகவும் அந்த முறைப் பாடுகளை வழங்குமாறு அரசியல் பழி வாங்கல் தொடர்பான விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு கோரிக்கை விடுத்திருந்தது.

இது சம்பந்தமாக பதில் பொலிஸ்மா அதிபர், சட்டமா அதபரிடம் ஆலோசனை கேட்டிருந்தார். இதற்கு பதிலளித்து சட்டமா அதிபர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதுடன் விசாரணை நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக தடையுத்தரவுகளை பிறப்பிக்க ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அதிகாரம் இல்லை என தெரிவித்துள்ளார். (ம-3)


### வீடு வாடகைக்கு தேவை

மானிப்பாய், சண்டிலிப்பாய் பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:- (2236)

077 108 5299

### வேலைவாய்ப்பு

தகுதி A/L, கணணி மற்றும் ஆங்கில அறிவு, பெண்கள், வயது வரம்பு 20-35

தொடர்புகளுக்கு:- (C-9225)

0777033039, 0761380212

### வேலைக்கு ஆட்கள் தேவை

போட்டோ கொப்பி, ரைப்பிங் தெரிந்தவர்கள் உடன் தேவை.

தொடர்புகளுக்கு:- (2238)

077 196 1591

### கணக்கீடு (பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்)

◈ பலாலி வீதி, கந்தர்மடச் சந்தி
◈ சுவாமியார் வீதி, கொழும்புத்துறை
(இரு இடங்களிலும்) (2077)

A/L 2020, A/L 2021, A/L 2022

BALAKAJEN (Tutorial Staff) 0765655956

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK-550*/=Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது) (C-8785)

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240 V2 TRAVELS

### வெள்ளவத்தையில் விருந்தினர் விடுதி

- அமைவிடம்:- காலி வீதி, வெள்ளவத்தை, பசல்ஸ் லேன். இல.39/1. (வெள்ளவத்தை சந்தைக்கு அருகிலுள்ள வீதி)
- காலி வீதியிலிருந்து 5 நிமிட நடை தூரத்திலுள்ளது.
- அமைதியான இடம் மற்றும் வாகன தரிப்பிட வசதியையும் கொண்டது.
- மூன்று மாடிகளுடன் 15 அறைகளைக் கொண்டுள்ளது.
- ஒருவர், இருவர், மூவர் மற்றும் குடும்பமாகவும் தங்கக் கூடிய அறைகளைக் கொண்டது.
- குளிரூட்டி மற்றும் சுடுநீர் வசதிகளைக் கொண்ட அறைகள்.
- அறையாகவும் வீடாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும்.
- ரூ.2500 இலிருந்து 4500 வரையான விலைகளில் அறைகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: (2214)

077 996 9478, 077 332 8510

### சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576



அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-9193)

### வேலைவாய்ப்பு + கற்கைநெறிகள்

இலங்கையின் வணிக நிறுவனங்களில் முன்னணி நிறுவனமான எமது நிறுவனத்துக்கு புதிய பணியாளர்கள் தேர்வு செய்யப் படவுள்ளனர். தகைமைகளுக்கேற்ப பதவிகள் வழங்கப்படவுள்ளது. அனைவருக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

* O/L மற்றும் அதற்கு குறைவான தகைமை உள்ளவர்களுக்கு விற்பனை மற்றும் விளம்பரம் சம்பந்தப்பட்ட பதவிகளுக்கு இடமுண்டு.
* ஆங்கிலம், சிங்களம் கற்பிக்கப்படும்.
* EPF, ETF, Medical உண்டு (2244)

தொடர்புகளுக்கு:- 0771743524, 0776953242

### New batches start



Diploma in English
Spoken English
IELTS (Academic / General)
IELTS Life Skills (A1 & B1)

British College of Higher Studies

Sirambiyady lane, Jaffna. 0212224550 / 0761380212 (C-9224)


# தமிழ்த்தாய் மன்றம்

## நடாத்தும் 11ஆவது

## இலவச மருத்துவ முகாம்

இடம் :- சுப்பிரமணிய வித்தியாலயம்.
வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை.
திகதி :- 15 பெப்ரவரி 2020 (சனிக்கிழமை)
நேரம் :- காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரை

## சேவைகள்

1. இலவச நீரிழிவு பரிசோதனை (Blood Sugar)
2. இலவச இரத்த அழுத்த பரிசோதனை (Blood pressure)
3. கொழும்பில் இருந்து வருகை தரும் VISION CARE நிறுவனத்தின் நவீன பேருந்தில் கணணி மயப்படுத்தப்பட்ட உபகரணங்கள் மூலம் இலவசமாக கண்பரிசோதனை செய்தல்.
4. இலவசமாக 150 மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படும்.
5. சித்த ஆயுர்வேத வைத்தியர்களின் இலவச வைத்திய சேவையும் இலவசமாக மருந்துகள் வழங்கலும் (வெற்றுப் போத்தல்களுடன் வரவும்)
6. போதைப்பொருள் பாவனை பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு - திரு.**ஜெ.கோகுலவாசன்** (அதிபர், வட்டுக்கோட்டை சுப்பிரமணியம் வித்தியாலயம், செயற்திட்டப் பணிப்பாளர், DASCO)
7. கொழும்பில் இருந்து வருகை தரும் இயற்கை வைத்தியரின் இலவச இயற்கை வைத்திய ஆலோசனை (Dr.**மோ.லாசகன்** - உளவியல் B. S.C)

இலவச நீரிழிவு பரிசோதனை செய்ய விரும்புபவர்கள் 12 மணித்தியாலங்கள் நீர், உணவு அருந்தாமல் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு வாருங்கள்.

(இ) **ஊடக அனுசரணை - வலம்புரி**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.